விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 5 ஜுல்கஜ் 24 இதழ் 219
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21-9-84

## கச்சதீவு பற்றி எம். ஜி. ஆர். தெரிவித்த அச்சம்

மதுரை, செப் 20 முதலமைச்சர் திரு இராமச்சந்திரன் நேற்று மதுரையிலிருந்து விமான மூலம் சென்னை பயணமாகு முன்னர் மதுரை விமான நிலையத்தில் அளித்த பேட்டியொன்றிலேயே கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்.

''கச்சதீவில் இஸ்ரேலியர்களின் உதவியுடன் இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சியளிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய ஒரு நடவடிக்கை, இந்தியாவுக்கு ஒரு அச்சுறுத்தலாக இருப்பதுடன் அத்தீவு சம்பந்தமாகஇலங்கை—இந்தியா செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறுவதாகவும் அமையும் என்று குறிப்பிட்ட தமிழக முதலமைச்சர்;

தமிழர்கள் போல இஸ்ரேலிய, இலங்கை உளவாளிகள் தமிழகத்தினுள் நுழைந்து வருவதாகவும், இவர்கள் தமிழக அரசியல் வாதிகளுக்கு பிரச்னைகளைக்கொடுத்து அவற்றில்தமிழகத்திலுள்ளஇலங்கை தமிழ் அகதிகளைச் சம்பந்தப்படுத்துவதையே நோக்கமாகக்

[8-ம் பக்கம் பார்க்க]



★ கட்டுநாயக்காவில் முதற்சம்பவம்

# விமானத்தில் வெடிகுண்டு: அனாமதேய தகவலால் புரளி!

(இ. கந்தசாமி)

டுபாயிலிருந்து கொழும்பு விமான நிலையத்திற்கு வந்த விமானம் ஒன்றில் வெடிகுண்டு இருப்பதாக கிடைத்த தொலைபேசிச் செய்தி ஒன்றைத் தொடர்ந்து விமானம் தீவிர சோதனைக்குள்ளானது

விமானம் வந்துகொண்டிருந்தபோதே டுபாயிலிருந்து கிடைத்த தொலைபேசி செய்தியைத் தொடர்ந்து கட்டுநாயக்காவிலுள்ள விமானப் படை தளத்தில் தரையிறக்கப்பட்டது. பின்னர் விமானத்திலிருந்த 250 க்கும் அதிகமன பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டு தீவிர சோதனையிடப்பட்டது.

அம்ஸ்ரர்டாம் நகரிலிருந்து 250 க்கும் அதிகமான யணிகளுடன் புறப்பட்ட கே. எல். எம். விமான சேவை விமானம் ஒன்று டுபாய் வழியாக கொழும்பு வந்தது. இங்கிருந்து ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் செல்லவிருந்தது.

கொழும்பு விமான நிலையத்தில் தரையிறங்க முன்னரே டுபாயிலிருந்து கிடைத்த தொலைபேசி செய்தியில் விமா

[8ம் பக்கம் பார்க்க]

## அந்தச் செய்தி

[யாழ்ப்பாணம்]

தீவிரவாத இயக்கமொன்றின் முக்கிய பேச்சாளரெனக் கருதப் டும் ஒருவர் வெளியிட்ட செய்தி பி. பி. ஸி. தமிழோசையில் ஒலிபரப்பப்பட்டதைத் தொடர்ந்து வடக்கில் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

குறிப்பிட்ட இச்செய்தி நேற்றுமுன்தினம் ஒலிபரப்பப்பட்டது

## அரியாலையில் காணப்பட்ட இரண்டு சடலங்கள்!

### ஒருவர் நுகேகொடையைச் சேர்ந்தவர்

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் நேற்றுக்காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இரு சடலங்களில் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

பாகெட - நுகேகொடையை சேர்ந்த புண்ணிய பெரேரா (வயது 50) என்பவரின் சடலமே அடையாளம் காணப்பட்டதாகும்,

இவர் புகையிரதப் பகுதி கட்டிட முகாரியாகக் கடமையாற்றி வந்தவர் என்றும்.

[8-ம் பக்கம் பார்க்க]

## “கடற்கரைப் பகுதியிலிருந்து குண்டு வந்து விழுந்தது!”

### கலாவதி மரணவிசாரணையில் கணவன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''வீட்டில் படுத்திருந்தபோது கூரையைப் பிய்த்துக் கொண்டு நெருப்புப் பந்தம் போன்று என் உடலில் பட்டது. உடன் காயம் தெரியவில்லை. சிறிது நேரத்தில் கழுத்தில் வலி ஏற்பட்டது. அதன்பின் தோள்மூட்டுக்களில் காயம் காணப்பட்டது. காலிலும் காயம் இருந்தது. பக்கத்தில் கிடந்த மனைவியின் தலையிலிருந்து இரத்தம் பீறிட்டது, அதன்பின் மயக்கமடைந்து விட்டேன்.''

கரணவாய் கொத்தாவத்தையைச் சேர்ந்த இளம் கர்ப்பிணி த. கலாவதியின் (19 வயது) மரணவிசாரணையில் சாட்சியமளித்த காயமடை

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். கச்சேரியில் நேற்றும்கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க செயலகத்திலுள்ள பாதுகாப்பு அறை 'போல்ட்' நேற்றுக்காலை 10 மணிக்கு திறக்கப்பட்டபோது திடீரென அதற்குள் துப்பாக்கியுடன் சென்ற இளைஞர்கள் பெருந்தொகையான முத்திரைகளையும், 7000 ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

இந்தப் பாதுகாப்பு அறை 'போல்ட்' முன்புஒரு தடவை

(8ம் பக்கம் பார்க்க)

## அதிபர், ஆசிரியர் உட்பட ஐவர் கைது!

(சி. பாலசிங்கம்)

மன்னார் கல்வி மாவட்டத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றிற்குச் சென்ற ஆயுதப்படையினர் அதிபர், ஆசிரியர்கள் உட்பட ஐந்துக்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்துள்ளதாகவும், கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் வவனியா முகாமிற்குக் கொ

[8-ம் பக்கம் பார்க்க]

## செயலகத்தை முற்றுகையிட்ட தாய்மார்!

### பிள்ளைகளைத் தாருங்கள் என்று கதறி அழுதனர்!

[யாழ்ப்பாணம்]

வடமராட்சி பகுதியைச் சேர்ந்த சுமார் 80 பெண்கள் நேற்றுக் காலை காலி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தங்கள் பிள்ளைகளைப் பெற்றுத்தரும்படிகேரி, யாழ் அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு முன் சத்தியாக்கிரகம் செய்தனர். இப் பெண்களுடன் 15 ஆண்களும் மறியல் செய்தனர்.

நேற்றுக்காலை எட்டு மணிக்கு கச்சேரிக்கு மந்த பெண்கள் 'ஐயோ'' என்று தலையில் அடித்தபடி, கச்சேரி வாசலுக்குள் அழுதுகொண்டு சென்

(8ம் பக்கம் பார்க்க)

## ஆந்திர சட்டசபையில் ராமராவுக்கேபெரும்பான்மை

### 161 பேர் ஆதரவு; ஒருவர் மட்டும் எதிர்ப்பு!

ஹைதராபாத், செப். 20 ஆந்திரமாநில சட்டசபையில் முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்தார், திரு, ராமராவுச்கு ஆதரவாக 161 வாக்குகள் கிடைத்தன. எதிராக ஒரு வாக்கு மட்டுமே கிடைத்தது.

இவ்வாக்கெடுப்பு ஆரம்பமாகுமுன்னர் புதிய சட்டசபை சபாநாயகராக திரு. வெங்கடரத்தினம் ராமராவ் கட்சியினரால் தெரிவு செய்யப்பட்டார்.

பாஸ்கரராவ் ஆதரவாளர் விஜயராம ராஜு என்பவரை சபாநாயகர் தெரிவுக்கு நிறுத்திய போதிலும், அவரால் தோல்வியையே தழுவ முடிந்தது

295 உறுப்பினர்களைக் கொண்ட ஆந்திர சட்டசபையில் ராமராவுக்கு ஆதரவாக 161 பேர் கொண்ட பெரும்பான்மை பலம் காணப்படுகின்றது.

(8ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் நேற்று...

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் 'ஜீப்' ஒன்றின் மீது நேற்று குண்டு வீசப்பட்ட போதிலும் 'ஜீப்' வண்டிக்கோ, அதில் சென்றவர்களுக்கோ எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வீச்சு சம்பவத்தின் பின்னர் சாவகச்சேரிப் பகுதியில் வாகனங்களினதோ பொது மக்களினதோ நடமாட்டம் குறைந்து அமைதியாகக் காணப்பட்டது. (மா)

## அரசின்நிலை: இன்று தெரியும்

[கொழும்பு]

தமிழர் பிரச்னைக்கு எந்தவகையில் தீர்வு காணலாம் என்பது குறித்து அரசாங்கம் இன்று அறிவிக்கும் என்று நம்பப்படுகிறது.

இன்று சர்வகட்சி மாநாடு மீண்டும் கூடும் போதே அரசாங்கம் தனது முடிவை அறிவிக்கவுள்ளது.

# விளம்பரம்

## விற்பனைக்கு

Cross Broilers 4/50 சேவல் குஞ்சு 1/90. ராதாகிருஷ்ணாஸ் 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார் கோவில். 1804

மானிப்பாயில் புன்னாலை ரோட் (9வது KM Field Unit) முன்னுள்ள காணியில் 4 பரப்பு வீடு கட்டக்கூடியகாணி உடனடியாகவிற்பனைக்குண்டு. தொடர்பு: த. நடராசா, புன்னாலை வீதி, மானிப்பாய். 1789

8 ஸ்ரீ 7620 வொக்ஸ் வெகன் 1300 CC உடன் விற்பனைக்கு உண்டு. T.V.தம்பையா 44/7, மணல்தறை லேன், கந்தர் மடம். 1819

ஊரெழு மேற்கு அம்மன் கோவிலடியிலிருந்து 200 யார் உள்ளுக்கு ஐந்து பரப்பு காணியுடன் கூடிய வீடு. வளவும் மூன்றுபரப்பு வெறுங்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: P. சங்கரப்பிள்ளை, ஊரெழு மேற்கு, சுண்ணாகம். 1856

மாவிலங்காடு, கீரிமலையில் 16 பரப்புத் தோட்டக் காணி கிணற்றுடன் (வீடு கட்டுவதற்கும் உகந்தது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு வி. கனகரத்தினம், தையிட்டிப்புலம், தெல்லிப்பழை. 1845

தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை வீதியில் மயிலியதனையில்4 பரப்புக்காணியும், வீடும்; 20 பரப்புக் காணி மொத்தமாகவும், துண்டுகளாகவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: R. சுந்தரலிங்கம், மயிலியதனை, தொண்டைமானாறு 1847

H 100 S Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. றவிச்சந்திரன், 308, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1840

அளவெட்டி வடக்கு, அணிஞ்சிலடி, விநாயகர் ஆலயத்துக்கருகில் 6¾ பரப்பு வீடு கட்டுவதற்குகந்த காணி விற்பனைக்குண்டு. கூடியவிலை எதிர்பார்க்கப்படும். தொடர்பு: விளம்பர இல; 1835, C/o, ஈழநாடு. 1835

Glacio - குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்கு ரூபா 2250/- பாலச்சந்திரன், 'மாலினிவாசா', பிளாக்ரோட், சங்கானை. 1827

கோண்டாவில் கிழக்கு, நவரட்னராஜா வீதியில், 1 லாச்சம் 11 6குளி காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இராமநாதன், 'பூபதிபவனம்'ஸ்ரேசன் ரோட், கோண்டாவில் கிழக்கு, தொலைபேசி: 22720 1842

ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கில், தபாற் கந்தோர், மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் பட்டினசபை எல்லைக்குள் சகல வசதிகளையும் கொண்ட ஏழு பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு சி.பாலசிங்கம்,ஓய்வுபெற்ற ஆசிரியர், வாரிவளவு, காரைநகர். 1854

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபலமான ஸ்தாபனம் ஒன்றிற்கு T.V. ரேடியோ திருத்துவதற்கு அனுபவமும், திறமையும் வாய்ந்த மெக்கானிக் ஒருவர் தேவை திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். தொடர்பு விளம்பர இல 1839 C/o ஈழநாடு. 1839

## தேவை

குடிபழக்கமற்ற தேகாரோக்கியமுள்ள 25-40 வயதுக்குட்பட்ட சாரதிதேவை மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது தொடர்பு கொள்க. சன்லைட் றைக்கிளீனேர்ஸ், 23 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 1858

யாழ்ப்பாணம், இந்து வேளாள இனப் பெற்றோர் அதே இனப்பெண்ணை,மகனிற்குத் திருமணம் செய்துவைக்க விரும்புகின்றனர். பெண் M. B. B. S டாக்டராகவோ, இறுதி ஆண்டில் படிப்பவராகவோ இருந்தால் நல்லது. I.C.M.A. P2 அல்லதுP3 படிப்பவர்களும் விரும்பப்படும். மகனிற்கு வயது 35. Accountancy தொடர்ந்து படிப்பதற்குU.K. போக ஆயத்தங்கள் செய்கிறோர் பெண்ணும் U. K. போகவிரும்பவேண்டும். தயவுசெய்து சாதகக் குறிப்பையும், குடும்ப விபரங்களையும் எழுதவும். விளம்பர இல: 1851. C/o, ஈழநாடு. 1851

பிரபல்யமான வியாபாரஸ்தாபனமொன்றிற்கு பிணைசெலுத்தக்கூடிய காசாளர் தேவை. விண்ணப்பதாரர் 25—35 வயதுக்குட்பட்டவராகவும், க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் சித்தியடைந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம் கிராமசேவகரின் நற்சாட்சிப்பத்திரத்துடன் 27-9-84க்கு முன்விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1843, C/o.ஈழநாடு, யாழ்ப்பாணம். 1843

## FOR SALE

A set of 12 Volumes of New Encyclopaedia for sale. Offers over Rs. 6000/-. Could be inspected at 5, Colombagam Rd, Chundikuli. 1841

## CLASSES

I. C. M. A. and Institute of Banking for May 1985 Exam. Classes October to March 1985. Past papers classes April to may 1985. Radhakrishna's 392, Navalar Road, Kailasapillayar Kovil. 1815

## WANTED

Qualified, experienced, first class full time, part time Lecturers and Instructors to Lecture for Civil, Structural, Electrical, Engineering, Quantity Surveying, Computer Programming,Chartered, I. C. M. A., I. A. A., Plumbing, Electrical Wiring and Type writer repairing students at Chavakachcheri and Manipay. Address: Director, 'Sivakee" Poly Technical Institute, "Arul Vasa" Post Office Road, Chavakachcheri 1846

## அறிவித்தல்

சன்லைட் றைக்கிளீனேர்ஸ் ஸ்தாபனத்தில் றைக்கிளீனுக்காக கொடுத்த உடைகளை அதற்குரிய திகதிகளில் பெற்றுக்கொள்ளாதவர்கள் 30-9-84க்கு முன்னர் தயவு செய்து பெற்றுக் கொள்ளவும். இத்திகதிக்குப் பின்னரும்பெற்றுக்கொள்ளாத உடைகளுக்கு நாம் பொறுப்பாளிகளல்லர். என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

சன்லைட் றைக்கிளீனேர்ஸ்,
23 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
1857

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி இறந்த மரணமெய்திய தெல்லிப்பழை வடமேற்கு அமிர்தநாயகம் பிலிப்பு குமாரகுலசிங்கத்தின் மரணச்சொத்து விடயத்தில்.

—மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/210.

மேரி திரேசா குமாரகுலசிங்கம்

தெல்லிப்பழை கிழக்கு
—மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 23-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
(ஒப்பம்)
பதிவாளர்

வரைவு
ம. சிதம்பரநாதன் (ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.
1860

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தாமோதரம் தேவகிருஷ்ணகுமாரன் என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

சண்முகம் தாமோதரம் வீமன்காமம் தெல்லிப்பழை
மனுதார்

மரணசாதன நியாயாதிக்க இல: ரி 214

எதிர்

தாமோதரம் பெண் சிவமணி வீமன்காமம் தெல்லிப்பழை
எதிர்மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச் சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படிநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும்1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம்24ம்திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 13 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாத சுந்தரம்
பதிவாளர்.

தாயரித்தது
மு. யோககுமார்
மனுதாரின்
சட்டத்தரணி.
1844


உங்கள் மணிக்கூடுகளைச் சிறந்தமுறையில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம்செய்யுங்கள்

**தேவன் வாச் வேர்க்ஸ்**
(பஸ் நிலையம்), சுன்னாகம்.

அளவெட்டி அலுக்கைச் சந்தியிலிருந்து மேற்படி விலாசத்திற்கு இந்நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (1849)



மலிவு விலையில் விற்றுத் தீர்க்க
**இன்னும் சில!**

★ எவர்சில்வர் ★ கிளாஸ் பொருட்கள் ★ ரீ. வி. அன்ரனு ★ மின்சார சுவிச் பிளக் ★ அடப்ரர் வகைகள் ★ ''சிற்றிசன்'' ★ சுவர்க்கடிகாரங்கள் ★ மேசைக் கடிகாரங்கள் ★ ரேஸ்ரர் ★பிளாஸ்ரிக்பொருட்கள் இன்னும்பல.

**பிரவுண்சன் ரேட் சென்ரா,**
''கூட்டுறவுக் கட்டிடம்'',
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(1861)


## விஸ்வமடுக்குளம் வாலிப விவசாயத் திட்ட கூட்டுறவுச் சங்கம்

### லிகிதர் பதவிக்கு வெற்றிடம்

மேற்படி எமது சங்கத்தின் லிகிதர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவற்றையும்
''தலைவர்,
வாலிப விவசாயத் திட்ட கூட்டுறவுச் சங்கம்,
விஸ்வமடுக்குளம்
என்ற முகவரியிட்டு
எதிர்வரும் 05-10 84-ந் திகதி

அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகைமைகள்:**

கல்வித்தகைமை: க. பொ. த. சாதாரண தரத்தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக கணிதம்/தூயகணிதம் தமிழ்பாஷை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி.

சம்பளம்: $\frac{195 — 345}{10\times10 — 12.5\times04}$

வயதெல்லை; 23 — 40

பொதுமுகாமையாளர்.

(1850)

## அந்தியேட்டி அழைப்பு

வல்வைச் சிவபக்தன்
**நாகமுத்து மகாலிங்கம்**
**(தண்டையல்)**

**தோற்றம்: 14-9-1892 மறைவு: 24-8-1984**



விபத்தின் விளைவாக தனது 92-ம் வயதில் காலமான எமது அன்புத் தெய்வம் ''பெத்தையா''வின் ஈமக்கிரியைகளில், நெருக்கடி நிலையையும் பொருட்படுத்தாது பங்குபற்றிய உறவினர், அன்பர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும் எமது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 23-9-84 (ஞாயிறு) அதிகாலை அன்னாரின் குச்சம் வீதி இல்லத்தில் நடைபெற்று அஸ்தி ஊருணி சமுத்திரதீரத்தில் சங்கமமாக்கப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கிறோம். மண்பகல் வீட்டுச்சவண்டிக்கிரியைகளுக்கும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் சிரேஷ்ட புத்திரி
மே. பர்வதாவர்த்தினி (ராசாத்தி),
மருமகன்: சட்டத்தரணி
சங்கர. வேலுப்பிள்ளை,
வல்வெட்டித்துறை.
1855

## மீனம்பாக்கம் குண்டு வெடிப்பு:

# மதுரை கதிரேசன் கைதானார்!!! விசாரணைகளில் புதிய திருப்பம்?

சென்னை, செப். 20

**சென்னை மீனம்பாக்கம் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டுவந்த முக்கிய சந்தேகநபரான மதுரை கதிரேசன் நேற்றுக் கைதானார். தமிழகப் பொலிசார் இவரைக் கைதுசெய்தனர்.**

கடந்த ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் நிகழ்ந்த பயங்கரக் குண்டு வெடிப்பில் 30 பேர் கொல்லப்பட்டிருந்தனர். அச்சம்பவத்தை யடுத்து மதுரை கதிரேசன் பொலிசாரினால் தீவிரமாகத் தேடப்பட்டு வந்தார்.

இச்சந்தேகநபர் மீனம்பாக்கம் குண்டுவெடிப்பு நிகழ்ந்த தினம் இலங்கை செல்வதற்காக விமானப் பயணச் சீட்டுப் பெற்றிருந்தார். ஆனால் இறுதி நேரத்தில் இவர் தமது பயணத்தை ரத்துச்செய்தார். இவர் செல்லவிருந்த இலங்கை 'ஏயர் லங்கா' விமானத்திலேயே மீனம்பாக்கத்தில் வெடித்த குண்டுகள் வைக்கப்பட்டிருந்த பயணப் பெட்டிகளும் ஏற்றப்படவிருந்தன என்று கூறப்பட்டது.

கதிரேசன் கைதாகியுள்ளதை யடுத்து, மீனம்பாக்கம் வெடிகுண்டுச் சம்பவ விசாரணைகளில் ஒரு புதிய திருப்பம் ஏற்படுமென்றும், பல முக்கிய தகவல்கள் வெளியாகுமென்றும் தமிழகப் பொலிஸ் வட்டாரங்கள் கருதுகின்றன.

முக்கிய சந்தேகநபரான கதிரேசன் உட்பட இதுவரை பதினொரு சந்தேகநபர்கள் மீனம்பாக்கம் சம்பவம் தொடர்பாகத் தமிழகப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் இலங்கையராவர்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகள் தற்போது இலங்கையிலும் ஆரம்பமாகியுள்ளன.

இன்னும் ஒரு மாத காலத்தில் குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுமென்று தமிழகப் பொலிஸ் அதிகாரி திரு. மோகனதாஸ் கூறியுள்ளது தெரிந்ததே. (கி)

---

## பாப்பரசர் பவனிவந்த வீதியில் 'ரைபிள்'களுடன் இருவர்!

வன்கூவர், செப். 20

பரிசுத்த பாப்பரசர் கனடாவில் வன்கூவர் நகரில் ஊர்வலமாக வந்த வீதியில் இரு நபர்கள் 'ரைபிள்' துப்பாக்கிகளுடன் நின்றனர். இவர்களைப் பாதுகாப்பு அதிகாரிகள் மடக்கிப் பிடித்து துப்பாக்கிகளையும் கைப்பற்றினர்.

இவ்விரு துப்பாக்கிநபர்களிடமும் ஜெர்மன் கடவுச்சீட்டுக்கள் இருக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்கூவர் பொலிசார் இவர்கள்மீதான விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். கனடாவில் பரவலாகச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டுவரும் பாப்பரசருக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி வலங்களின்போது குண்டு துளைக்க முடியாத தமது பிரத்தியேக மோட்டார் வானினுள்ளேயே நின்று அவர் பொதுமக்களுக்குத் தரிசனம் கொடுத்துவருகின்றார்.

இதேவேளை நேற்று முன்தினம் பாப்பரசர் கலந்துகொண்ட வைபவமொன்றுக்குக் கத்தியுடன் வந்திருந்த ஒருவரையும் பொலிசார் கண்டுபிடித்ததுடன், அந்தநபரை அவ்வைபவம் நடந்த இடத்திலிருந்தும் அப்புறப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது! (கி)

---

## செல்லப்பெயர் 'ஹரி'

லண்டன், செப். 20

பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸுக்கும், இளவரசி டயானாவிற்கும் பிறந்துள்ள இரண்டாவது ஆண்குழந்தைக்கு ஹென்றி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஆயினும் 'ஹரி' என்ற செல்லப் பெயருடனேயே அக்குழந்தை அழைக்கப்படும் என்று அரசகுடும்பத்தினர் தெரிவித்தனர்.

இளவரசர் 'ஹரி' பூரண அரச குடும்பச் சம்பிரதாயங்களுக்கமைய வீண்ஆடம்பரங்கள் இன்றி சாதாரண குழந்தைகள் போன்றே வளர்க்கப்படுவார் என்றும் இளவரசர் தம்பதிகள் கூறினர். (கி)

---

## ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டுவளம் 'கொழும்பு அரும்பொருட்காட்சிச்சாலை' (ஆங்கிலம்)

5-35 சிறுவர் இசை நிகழ்ச்சி (சிங்களம்)

6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)

6-15 'பிளாஷ் கோர்டன்' கார்ட்டூர்ன் சித்திரம் (ஆங்கிலம்)

(6ம் பக்கம் பார்க்க)

---

### சாராய ஊழல் விசாரணை

## எம். ஜி. ஆர். மீதான குற்றச்சாட்டுகள்

# பொய்யானவை!

சென்னை, செப். 20

தமிழ்நாடு அரசுமீதான மதுபான சாராயக் குற்றச் சாட்டுக்கள் குறித்து ஆராய்ந்த நீதிபதி ராமபிரசாத்ராவ் ஆணைக்குழு அதன் விசாரணை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

தமிழக அரசாங்கம் மீதும், முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் மீதும் சுமத்தப்பட்ட மதுபான ஊழல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை என்று இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும், தமிழக அமைச்சர்கள் சிலர் மீதும் இம்மதுபான ஊழல் சம்பந்தமாகத் தெரிவி கப்பட்டிருந்த புகார்கள் ஆதாரமற்றவையாகவுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிபதி பிரசாத்ராவின் இவ் வாணைக்குழு விசாரணை அறிக்கையை யடுத்து தமிழக அரசு மீது மதுபான ஊழல்கள் குறித்து வழக்குத் தாக்கல் செய்வது அவசியமற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வறிக்கையின் சாராம்சம் தமிழக சட்டசபையில் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தது. (கி)

---

## வண்ணை பெருமாள் ஆலய உற்சவம்

(வண்ணார்பண்ணை)

வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 29-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இவ்வாலயத்தில் நடைபெறும் புரட்டாசிச் சனி உற்சவம் இம்மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 13-ம் திகதி கடைசிச் சனிக்கிழமையுடன் முடிவடைகிறது.

புரட்டாசிச் சனிக்கிழமை உற்சவ காலங்களில் வழமைபோல் இம்முறையும் தொண்டர் சேவையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை மேற்கொண்டுள்ளது,

மேற்படி பெருமாள்கோவில் பரிபாலன சபையின் தலைவரின் வேண்டுதலின் பேரில் இந்து இளைஞர் பேரவை இத்தொண்டர் சேவையை நடத்தவிருக்கின்றது. இவ்வாலய உற்சவதினங்களிலும் புரட்டாதிச் சனி உற்சவ தினங்களிலும் தொண்டர்களைச் சேவையில் நிறுத்த பேரவை ஏற்பாடு செய்து வருகிறது.

---

## மருத்துவ மாதின்றி மக்கள் அவதி

(சித்தன்கேணி)

வட்டு மேற்குப்பகுதியில் மருத்துவமாது இன்றி மக்கள் பெரும் அவதியுறுகின்றனர்

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதிக்கு மருத்துவமாது நியமிக்கப்படவில்லை. இதுபற்றி பலபொதுஸ்தாபனங்கள் பலதடவைகள் வடபிராந்திய சுகாதார அத்தியட்சகருக்கு கடிதமூலமும், நேரிலும் தெரிவித்துள்ளது.

---

### தெற்காசிய விளையாட்டுக்கள்

## 8 தங்கப்பதக்கங்களுடன் இந்தியா முன்னணியில்!

கார்ட்மன்டு, செப். 20

நேபாளத்தின் கார்ட்மன்டு நகரில் இடம்பெற்றுவரும் தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா எட்டுத் தங்கப் பதக்கங்களைப் பெற்று முன்னணியில் நிற்கின்றது.

இப்பதக்கங்கள் அனைத்தும் நீச்சலிலேயே பெறப்பட்டுள்ளன ஒன்பது தங்கப் பதக்கங்கள் நீச்சலுக்கென ஒதுக்கப்பட்டன.

இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், நேபாளம், மாலைதீவு, பங்களாதேஷ், இலங்கை ஆகிய 7 நாடுகள் கலந்துகொள்ளும் இப்போட்டிகளில் இந்தியாவே அதிகளவு பதக்கங்களுடன் முன்னணியில் வருமென்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்

தெற்காசிய விளையாட்டுக்களில் மேற்குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த 400 வீரர்கள் ஐந்து விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுக்கின்றனர். (கி)

---

## மாணவர் அமைப்புக்களை ஒன்றுபடக் கோரிக்கை

(புலோலி)

வடபகுதியில் மாணவர்களால் இயக்கப்படும் மாணவர் அமைப்புக்களை ஒன்றுபடுத்தி ''தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம்'' என்ற அமைப்பின் கீழ் இயங்கவேண்டுமென வடமராட்சி மாணவர் ஒன்றியம் சகலமாணவர் இயக்கங்களையும் கேட்டுள்ளது

வடமராட்சிமாணவர் ஒன்றியத்தின் கோரிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-''எமதுபிரதேசத்தில் பலமாணவர் அமைப்புகள் உள்ளன இதனால் மாணவசமுதாயத்தின் பலம் வலுப்படத் தடையாகவுள்ளது. பல்கலைக் கழக, பாடசாலை தமிழ்பேசும் மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்

''பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், உயர்தர மாணவர் ஒன்றியம், யாழ் மாணவர் குழு, வடமராட்சிமாணவர் ஒன்றியம் உட்படசகல மாணவர் அமைப்புக்களும் ஒன்றுசேர்ந்து ''தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம்'' ஆக இயங்க வேண்டும் இதுசம்பந்தமாக இன்று கூட்டமொன்றையும் நடாத்துகின்றோம் இதற்கானசகல ஒத்துழைப்பையும், ஆதரவையும் சகலமாணவர் இயக்கங்களிலிருந்தும் எதிர்பார்க்கின்றோம்

---

## நகைத் தொழிலாளி தாக்குதலுக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் வேலைபார்த்து வந்த நகைத்தொழிலாளி ஜூலைக்கலவரத்தின்பின்பருத்தித்துறை நகைக்கடையொன்றில் வேலை பார்த்தபோது அங்கு கடைகள் தீக்கிரையானதால், சொந்தவீட்டில் தொழில் பார்த்துவந்த சமயம், ஒருநாள் இரவு நேரம், தாக்குதலுக்குப்பலியானார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்லையா செல்வராசாவின் (55 வயது) மரணவிசாரணையில் மேற்கண்டதகவல் தெரியவந்தது

யாழ். பதில்நீதவான் கேசவன் மரணவிசாரணை நடத்தினார்

வீட்டில் பகலில் வேலை செய்துவிட்டு மாலை 5 மணிக்கு வெளியில்சென்று இரவு 9 மணிக்கு அவர்வீடுதிரும்புவது வழக்கமென்றும், அவருக்கு மதுப்பழக்கம் உண்டென்றும் ஆனால் சுயநினைவுடன் தினமும் வீடுதிரும்புவார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்தஇரவு மனைவி, பக்கத்துவீட்டிற்கு சென்றசமயம். அவர், சிகரட் வாங்க கடைக்குச்சென்றதாகவும், ராணி என்பவர் ஓடிவந்து இறந்தவரை யாரோ அடிப்பதாக அவர் மனைவியிடம் கூறியதாகவும், தெரிவித்தார்.

மனைவி ஓடிச்சென்றபோது, தலையில் இரத்தக்காயத்துடன் விழுந்துகிடந்தார் என்றும், இரு இளைஞர்கள் சோடா கொடுத்தபின் 'அம்மா' என்று கூறியபடி மயக்கமடைந்தாரென்றும் கூறப்பட்டது.

காரில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்குக்கொண்டு சென்று, அங்கிருந்து யாழ் அரசினர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

பிரேதபரிசோதனை நடத்துமாறு சட்டவைத்திய அதிகாரிக்குபணித்து விசாரணையை இம்மாதம் 21ம் திகதிக்கு ஒத்தி வைத்தார் (க)

### மணிவாக்கு

தங்களைப் பற்றியே பேசுபவர்களைக் குறைகூறுகிறோம் ஆனால் அந்த விஷயந்தானே அவர்கள் நன்றாகப் பேசக் கூடியது.

— அனடோல் ப்ரான்ஸ்

## நமது நோக்கு

# மதசார்பற்ற அணுகுமுறை

இலங்கையில் சிங்கள மக்கள் - குறிப்பாக சிங்கள பௌத்தர் மாத்திரமே ஆதிக்கத்தில் இருக்கவேண்டும் என்று சிங்கள மக்கள் நம்புவதாயின், அவர்கள் கனவுலகத்தில் வசிப்பவர்களே ஆவர்.

இலங்கையைத் தங்கள் நாடாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியவரும் இந்நாட்டு மக்களே. இவர்கள் யாவரும் தங்களுடைய சொந்த நன்மையை முன்னிட்டாவது ஒன்றுபட்டிருந்து வாழ்ந்தாகவேண்டும்.

உலகத்தின் எப்பகுதியிலும் ஒரே தேசியச் சமுதாயம் என்பது ஒரே மதம், ஒரே மொழி, ஒரே இனம் என்று பொருள் கொண்டிருந்ததில்லை. இலங்கையிலும் இவ்விதம் இருந்ததில்லை. வரலாற்றைத் திரிப்பதில் பயனில்லை.

இது ஒரு சிறு நாடு; இந்தியா போன்ற பெருநாடு அல்ல. பலதரப்பட்ட மதங்களைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் வாழ்கிறார்கள் என்பதினால் ஒரே தேசியச் சமுதாயமாக இந்தியா இல்லாது போகவில்லை; இன்றும் இந்தியாவில் பாகிஸ்தானிலும் பார்க்க அதிகமான முஸ்லிம்கள் இருப்பதைப் பலர் அறியார்.

அதேபோன்று இந்தச் சின்ன நாட்டில் சிங்கள மக்களுக்கு அயலவர்களாகத் தமிழர் இருப்பதினால் தேசியச் சமுதாயம் பாழடைய வேண்டியதில்லை; ஆனால் இவ்விரு சமூகங்களும் (இனங்களல்ல) ஐக்கியமாக வேண்டும்; இத்தகைய நிலைமை இருக்கும்போது தான் ஒருநாடு ஒரே தேசிய சமுதாயம் ஆகிறது. இன்று பேசப்படும் தேசியஒற்றுமை தமிழ் மக்கள் நன்கறிந்த 'ஒற்றுமை'.

எனவே ஐக்கியப்படுத்திக் கொள்ளும் சக்தி எங்கிருந்து கிடைக்கும்? வானத்திலிருந்து விழாது; அண்டை நாடாகிய இந்தியாவோ, தூர நாடுகளாகிய அமெரிக்காவோ, ரஷ்யாவோ, சீனாவோ, ஜப்பானோ தங்கள் செல்வாக்கிலிருந்து உதவியாக வழங்கமுடியாது.

நாம் முன்னே கூறினது போல் இந்தநாட்டில் எல்லோருக்கும் சம உரிமை வழங்கவேண்டுமென்ற அசையாத உண்மை ஆட்சியிலிருப்பவர்களுக்கும் அவர்கள் பிரதிநிதிப்படுத்தும் பெரும்பான்மை மக்களுக்கும் அடிப்படை உணர்வாக அமையவேண்டும். குறிப்பாக சிங்களபௌத்தமக்கள் நாட்டின் சுதந்திரத்துக்கு இடர் விளைக்கும் கருத்துக்களைக் கைவிடவேண்டும்.

அது இலகுவான காரியமா? இல்லையென்பதை நீண்ட காலமாக நாட்டை வருத்தும் பிணிநிலை இன்று தெளிவாக்கிவிட்டது.

இந்தப்பிணிநிலை 'போர்' நிலையாக மாறி நாம் நம்பக்கூடாத அளவிற்கு நாட்டுக்குத் தீங்கு விளைக்குமென்பதை ஆட்சியாளர் மட்டுமல்ல பொதுமக்கள்உணர்ந்தபாடில்லை. பொது மக்கள் தாமே சிந்திக்குமளவிற்கு கட்சி ஆட்சி அமைந்திருக்கவில்லை.

இது ஒரு தமிழனின்அல்லது தாக்கப்பட்ட சமூகத்தினரின் வெறும் வெருட்டல்ல.

இன்று நடைபெறும் சம்பவங்களை நிதானமாகப் புரிந்துகொண்டால், தமிழ் மக்களுக்கு எதுவித பாதுகாப்புமில்லையென்பதும் அவ்வித அச்சத்தாலும், ஆத்திரத்தாலுமே இந்த அழிவுப் பாதை திறக்கப்பட்டிருப்பதும் தெளிவாகும்.

இப்பாதையில் சிங்கள இளைஞர்கள், தமிழ்இளைஞர்கள், தமிழ் அப்பாவி மக்கள் ஆயிரக்கணக்கில் அழிவதை நிறுத்த முடியாது திண்டாடும் நிலை பரிதாபமானது

அது நிற்க, விடயம் என்னவென்றால் வாசாலமாகப் பேசப்படும் சம உரிமை நிராகரிக்கப்பட்டுள்ளது; அதனால் எழுந்த குழப்பமே இன்று முற்றியிருக்கிறது.

ஆளும் சமுதாயம் ஒன்று; மற்றவை ஆளப்படும்சமுதாயங்கள். 'தமிழ் மக்கள் உரிமை' என்ற போராட்டம் இந்த அடிப்படைப் பாகுபாட்டில் எழுந்தது. இன்று விசித்திர நிலை அடைந்திருக்கிறது

இந்தப் பாகுபாடு சமய, அரசியல் தலைவர்களின் போதனையால், சாதனையால் முற்றாக நீங்கிவிடும் பண்டமல்ல. 'தமிழர்கள் இந்தநாட்டில் வாழ்ந்து போகட்டும்' என்ற மனப்போக்கு இனிமேல் உதவாதெனலாம்.

இலங்கையில் ஒரே ஒரு சமுதாயம் அது சிறிலங்கன் சமுதாயம் என்று பேசிவரும் ஜனாதிபதி, பிரதமர், பந்தோபஸ்து அமைச்சர் போன்ற சிங்களத் தலைவர்கள் எதனைக் கருதுகின்றனர்? சிறிலங்கன் சமுதாயமென்றால் சிங்களச்சமுதாயம்என்பதே. சத்தியத்திற்கு மாறான இக்கொள்கை எவ்வாறு வெற்றியடையும்?

இதனை நிரூபிக்கும் பொறுப்பு எமதல்ல. எங்கு பார்த்தாலும் இதனை நாம் காணும்போதும் கேட்கும் போதும் இது இலகுவில் புலப்படும். இந்த நிலைமை முற்றாக மாறவேண்டும்.

தமிழ் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் அபாயநிலை, அவர்களின் எவ்வித பாதுகாப்புமற்ற கொடுமைநிலை, ஆட்சியாளருக்கு அனுதாபம் ஏற்படுத்துமானால் இராணுவம் உடனடியாக அப்பகுதியிலிருந்து எப்பவோ திருப்பி அழைக்கப்பட்டிருக்கும்.

பேச்சைவிடக் காரியம் சிறந்தது. குழப்பத்தைப் பெருப்பிக்கும் பேச்சைக் கைவிட்டு பத்திரிகைகளின் கோளையும் குள்ளப்போக்கையும் மட்டுப்படுத்தி, சமாதானத்திற்குதவும்திடமான முடிவில் இறங்கவேண்டும். அதற்கு மதசார்பற்ற அணுகுமுறை நல்ல பலனளிக்கும்.

பௌத்த மதத்தினருக்கும் சங்கத்து...ரும், ஏனைய தலைவர்களுக்கும் தமிழ் மக்களில் அனுவசியமான சந்தேகம் இருக்கவேண்டியதில்லை.

மதரீதியில் மொழிப்பாகுபாட்டில் இவ்வி.. சமூகங்களுக்கும் இனிமேல் மோதல் ஏற்பட நியாயமில்லை. தமிழ் மக்களின் பாரம்பரியஉறைவிடங்களை தாமே விருத்தி செய்யவும் பாதுகாக்கவும் உரிமையும், அதிகாரமும் உண்டென்றால் நாடு பூரண சுகமடையும்.

# புண்ணிய புரட்டாதியில் நாளைவரும் முதல்சனி

உலகத்திலுள்ள ஒவ்வொரு சமயத்திலும் நாகரீகத்திலும் வாரத்தில் ஒருநாள் வருடத்தில் ஒருமாதம் சிறப்புப் பெறுகிறது. இத்தகைய நல்ல நாட்களிலும், மாதங்களிலும் விழாக்களும் சடங்குகளும் நடைபெறுகின்றன. திங்கட்கிழமை சிவனடியார்களுக்குச் சிறப்பானது. சனிக்கிழமை விஷ்ணு அடியார்களுக்குச் சிறப்பானது. வெள்ளிக்கிழமை சாக்தர்களுக்குச் சிறப்பானது. ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களுக்கும் வெள்ளிக்கிழமை இஸ்லாமியருக்கும் சிறப்பானவை.

நவராத்திரி மூன்று சக்திகளுக்கும் உகந்த ஒன்பது நாட்களாகும். சிவராத்திரி சிவபெருமானுக்கு உகந்தது. வைகுண்ட ஏகாதசி நாரயணனுக்கு உகந்தது. ''மாதங்களில் நான் மார்கழி'' என்ற கண்ணன் கூற்று இங்கு கவனிக்கற் பாலது

ஆர். கே. முருகேசு

பொதுவாக இந்து சமயத்திலுள்ள தெய்வங்களுக்குரிய நல்ல நாட்களுக்கும் நல்ல மாதங்களுக்கும் அடிப்படைக் காரணமாயுள்ள ஆன்மீகத் தத்துவத்தின் உண்மைமைய ஆராய்தல் பயனுடையது. வருடத்திற்கு ஒரு முறைநமது பூமி சூரியனை வலம்வருகிறது. இவ்வாறு வலம் வரும்போது இது வான மண்டலத்திலுள்ள வெவ்வேறு பகுதிகளையும் நட்சத்திர மண்டலங்களையும் கடந்து வருகிறது. வான பரப்பின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொருவகைப் பிரபஞ்சத் தெய்வசக்தி செயற்படுகிறது எனவே, பூமி சூரியனைவலம் வரும்போது பலவகைத்தெய்வ சக்திகளுக்கூடாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது. இந்து மதத்திலுள்ளதெய்வங்கள் இப்பிரபஞ்ச சக்தியின் விளக்கங்களேயாதலால் பூமி அச்சக்தி மண்டலத்தில் இருக்கும் பொழுது அச்சக்திக்குரிய தெய்வநாளாகக் கொண்டாடப்படுகிறது. மார்கழி மாதத்தில் பூமி சுற்றுகின்ற வானப் பரப்பில் பிரபஞ்ச உருவம் அமைக்கும் சக்தி விஷ்ணுசக்தி எனப்படுவதால் அது விஷ்ணுவுக்குகந்த மாதமாகக் கருதப்படுகிறது. மாசிமாதத்தில் பூமி சஞ்சரிக்கும் வானப்பரப்பில் சம்ஹாரசக்தியான சிவசக்தி செயற்படுவதால் இது சிவனுக்கு உகந்ததாகக் கருதப்படுகின்றது.

### புரட்டாதிச் சனிக்கிழமை

இனி விஷ்ணுவுக்குரிய வாரங்களின் மகிமையையும் சனிவார மகிமையையும், சனி நோன்பையும் சிறப்பாகப்புரட்டாதிச் சனிக்கிழமையின் மகிமையையும் ஆராய்வோம். நவக்கிரகங்களில் சனியைப்பற்றிக் கேட்கும் பொழுது பலருக்குக் குலை நடுக்கம் ஏற்படுகிறது. கொடிய சனியன் மக்களை படாத பாடு படுத்தி விடுவான். ஏழரைச் சனியன் சொல்லொணாத் துன்பத்தைச் செய்வான், என்றெல்லாம் பலர் பயப்படுவதுண்டு இவ்வாறு ஏங்கிப் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. பிறக்கும் பொழுது சனியன் கெட்ட இடத்தில் இருக்கப் பெறுபவர்களுக்குத் தான் இத்தகைய கெடுதல்களை ஏற்படுத்திக் கெடுக்கும்.

நல்ல இடத்தில் இருந்து விட்டால் சனிதிசை மற்றெல்லாத் திசைகளையும் விட அதிக ஐசுவரியம் போகபாக்கியம், சீர் சிறப்புகளைக் கொடுக்கும், சனி ஒரு தர்மக் கிரகம். அதர்மிகளுக்கு அவஸ்தைகளைக் கொடுத்து அவர்களை அழிக்கும் தர்மிகளுக்கு பெறுவதற்கரிய பெரும் நன்மைகளைச் செய்யும் 'துஷ்டநிக்கிரகம் சிஷ்ட பரிபாலனம்' என்னும் கண்ணனின் தத்துவத்தைத்தான் சனிக்கிரகம் பின்பற்றுகிறது, சிவன் சம்ஹாரக் கடவுள், பிரம்மா சிருஷ்டி கர்த்தா, உலகில் பாவிகளைத் தண்டித்து புண்ணிய சீலர்களை ஆத

(5ம் பக்கம் பார்க்க)

புரட்டாதிச் சனிக்கிழமையில் சனிக்கிரகவழிபாடு செய்வதும் சனிபகவானைக் குறித்து விரதமிருப்பதும் சைவமக்களின் வழக்கமாகும்.

நாளைவரும் சனிக்கிழமை இவ்வருடத்து முதலாவது புரட்டாதிச் சனிக்கிழமை.

இப்போது சனிபகவான் துலாராசியில் சஞ்சரிப்பதால் இடபம் ராசிக்குரியோருக்கு அட்டமத்து சனியாகும். கன்னி, துலாம், விருச்சிகம் ஆகியராசிக்காரர்களுக்கு ஏழரைச்சனி காலமாகும்.

இந்தராசிக்குரியோர் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விரதமிருப்பதும் எள் தீபம் ஏற்றும் வழிபடுவதோடும் சிவ வழிபாடு திருமால் வழிபாடு என்பன செய்வதாலும் ஓரளவுக்காவது அமைதியை அடையலாம்.

### வெள்ளிச்சிந்தனை

## திருமுறை படித்தல்

"தமிழ் மக்கள் வழிபடும் ஆலயங்களில் வடமொழியில் வழிபாடுகள் செய்தலைத் தவிர்க்க வேண்டும்—தமிழ் மக்கள் புரிந்துகொள்ளும்வகையில் வழிபாடுகள் அனைத்தும் செய்யப்பட வேண்டும்'' எனத் தமிழ் அபிமானிகள் பலர் கோஷமிடுகின்றார்கள். வடமொழியில் உள்ள வசனங்களையும், அருச்சனை நாமங்களையும், கருத்துக்களையும் தமிழ் மொழியில் கூறலாமேயன்றி, மந்திரங்களை தமிழில் சொல்லுதல் இயலாது. மந்திரங்களுக்கு ஒலி பிரதான அம்சமாகும் என்றும், தமிழ்மொழியில் உள்ள திருமுறைகள் வேதங்கள் போன்றும், மந்திரங்கள் போன்றும் பெருமையுடையனவாகும்என்றும்தமிழ் மொழியிலேயே வழிபட விரும்புவோர்க்கு உபகாரமாகவே திருமுறைகள் விளங்குகின்றன என்றும் நம் சமயச் சான்றோர் பலர் தமிழ்மொழியையும் வடமொழியையும் ஒரே சமமாகப் போற்றுவர்.

—அருளாளன்

தமிழ் மொழியின் அருள் நூல்களான திருமுறைகளே சைவத் தமிழ் மக்களுக்கு வாய்த்த பெரும் பேறென இருக்க சைவத் தமிழ் மக்களாயுள்ளோர் தேவாரங்களை ஆங்கில எழுத்துக்களால் எழுதிப்படிப்பது நமக்குச் சிறுமையன்றோ.

பதினைந்து வருடங்கள் தொடர்ந்து தமிழ் படித்த ஒருவனால் தேவாரம், இராமாயணம் முதலிய செய்யுள் இலக்கியத்தின் பொருளை அறியமுடியாத நிலை நம்மத்தியில் நிலவ, ஆங்கில எழுத்துக்களால் தேவாரம் படிப்பவர்களின் சமய அறிவும் வாழ்வும் எப்படியிருக்கும் என்பதை சைவப் பிரமுகர்கள் ஊக்கித்துச் செயற்பட வேண்டும்.

(5-ம் பக்கம் பார்க்க)

★ இன்று வல்லிபுரப்பகுதியிலுள்ள குருக்கட்டுப்பதி விநாயகர் கொடியேற்றம்.

## பெருமைமிகு குருக்கட்டுப்பதி

பாரதத்தைப் பருப்பதத்தில் பொறித்தவன்காண்
பாவலர்கள் போற்றுகின்ற பாவவன்காண்
தாரகமாம் ஓங்காரம் தந்தவன்காண்
தண்மதியும் தளிரறுகும் பூண்டவன் காண்
ஏரகமாம் வல்லிபுரம் வாழ்பவன் காண்
ஏரம்பன் ஆனதொரு ஏகம்பன் காண்
நீரகமாய் நிற்கின்ற நீரவன் காண்
நீதியிலே பெரிய தொரு நிமலன்தானே.

குருக்கட்டுப் பெரும்பதிக்கே குருவவன் காண்
கும்பிட்டோர்க் கருளுகின்ற கோலன்தான்காண்
அருக்கட்டு வினையெல்லா மழிப்பவன்காண்
ஆசையொடு ஆணவத்தை ஒழிப்பவன்காண்
மருக்கட்டு மணிமலர்கள் மகிழ்பவன்காண்
மாதுமையாள் பெற்றெடுத்த மைந்தன்தான்காண்
திருக்கட்டு வல்லிபுரம் மேயினன்காண்
திருவாரும் செல்வ விநாயகன்தானே.

— ஆழ்கடலான்

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தின்
# சுவரொட்டி சித்திர போட்டி

[கொழும்புத்துறை]

அடுத்த வருடம் சர்வதேச இளைஞர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தேசிய இளைஞர் சேவை மன்றம் சுவரொட்டியொன்றை நிர்மாணிப்பதற்கான சுவரொட்டிச் சித்திரப் போட்டியை நடாத்த முடிவு செய்துள்ளது.

யாழ் மாவட்ட தேசியஇளைஞர் சேவை மன்றம் இச்சுவரொட்டிச் சித்திரப் போட்டியில் இளைஞர் கழகங்களை ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. 17-29 வயதுக்குட்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் இச்சுவரொட்டிச் சித்திரப் போட்டிகளில் பங்குபற்றலாம் என்றும், இச்சுவரொட்டிச் சித்திரம் சமாதானம், அபிவிருத்தி, பங்களிப்பு என்பனவற்றைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதற் பரிசாக 3,500 ரூபாவும், இரண்டாம் பரிசாக 1000 ரூபாவும், மூன்றும் பரிசாக 500 ரூபாவும் வழங்கப்படும். தெரிவுசெய்யப்படும் பத்துச் சித்திரங்களுக்குச் சன்மானச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## வெள்ளிச்...

(4-ம் பக்கம் பார்க்க)

தேவாரம் - பெரியபுராணம் போன்ற செய்யுள்களை பல வருடங்கள் தமிழ்படித்த ஒருவனால் அறியமுடியவில்லை என்றால் அதற்குக் காரணம் அம் மாணவன் தவறும் அல்ல. தமிழ்மொழியின் கடுமையும் அல்ல. இவற்றை விளங்கிக் கொள்ளவேண்டிய அறிவு தேவை என்ற நோக்கில் செயற்படாமையே முக்கிய காரணமாகும். இது சைவ மக்களால் நீக்கப்படவேண்டும்.

இவ்வுலகில் வாழும் சைவத் தமிழ் மக்களின் பிரதான கடமையாக இன்று முன்னிற்பது சமய விளக்கமும், அபிமானமும், ஒழுக்கமும் உடையவர்களாக வாழவேண்டுமென்பதேயாகும். இப்படியானநோக்கத்தில் முதலாவதாகச்செய்ய வேண்டியது எழுத்துப் பிழையில்லாமலும் பொருளுணர்வோடும் திருமுறைகளைப் பயின்று ஓதுவதேயாகும்.

மலேசியா, சிங்கப்பூர் முதலிய இடங்களில் வாழும் தமிழ் மக்கள் ஆங்கில எழுத்துக்களால் தேவாரங்களை உச்சரித்துப் பாடம்பண்ணுவது பற்றி நாம் அக்கறையின்றி இருத்தலாகாது. இது ஒவ்வொரு தமிழ்ச்சைவசமயிக்குமே அவமானமாகும். உலகம் முழுவதும் வாழும் சைவ சமயிகளுக்கிடையே தொடர்பும், புரிந்துணர்வும் இல்லாமையும் எமது திருப்பணிகளுக்குப் பணம் வாங்குவதற்குமட்டும் மலேசியா சிங்கப்பூர் வாழ் சைவ மக்களுடன் நாம் தொடர்பு கொள்வதுமாக மட்டும் இருத்தலாகாது.

அளித்துப் பிறக்கவொட்டா
அயில்வேலன் கவியை
அன்டால்
எழுத்துப்பிழையறக் கற்கின்
றிலீர் எரிமூண்டதென்ன
விழித்துப்புகையெழ
பொங்கு வெங்கூற்றன்
விடுங் கயிற்றால்
கழுத்தில் சுருக்கிட்டு இழுக்
கும் அன்றே கவிகற்
கின்றதே.

—அருணகிரிநாதர்

## குண்டு வெடிப்பு
### யன்னல் கண்ணாடிகள்
## நொருங்கின

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் தலைமை அலுவலகம் முன்னர் வெடித்த குண்டின் அதிர்ச்சியினால், அலுவலக யன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கியுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9மணியளவில் பிரதான வீதி ஓரமாகக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

வீதியின் கிழக்குப் பக்கமாக உள்ள கடையின் கண்ணாடிகளும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ம]

# “மாணவர்களின் கல்விக்கு சமூக இயக்கங்களும் உதவவேண்டும்”
## வடபகுதி அதிபர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

“சகல மாணவர்களும் தத்தம் பாடசாலைகளுக்கு சென்று கல்வியைத் தொடர்வதற்குப் பெற்றோர்களுக்கும் சமூகஇயக்கங்களுக்கும் பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டும்.”

வடமாகாண அதிபர்கள் சங்கத்தினர் நேற்று மேற்கண்டவேண்டு கோளை விடுத்துள்ளனர்.

சங்கத்தலைவர் திரு க. அருணசலம், செயலாளர் திரு. மு. க. இராசரத்தினம் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

“அண்மைக் காலத்தில் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்து வருவதையிட்டுவட மாகாண அதிபர்கள் சங்கம் ஆழ்ந்தகவலை கொண்டுள்ளது. மாணவர்களுடைய கல்வி இவ்வாறு தடைப்படுவதால் மாணவர்களின் உளவளர்ச்சியும் கல்வியும் பெரும் பாதிப்படையும்.

“எத்தகைய கஷ்டமான சூழ்நிலையிலும் மாணவர்களுடைய கல்வி தொடர்ந்து நடைபெறவேண்டும்என்பதை அதிபர்களும், பெற்றோர்களும் சமூக இயக்கங்களும் நன்கு உணர்ந்துள்ளனர். இன்று மாணவர்களுடைய பாதுகாப்பு முக்கிய பிரச்னையாக இருந்து வருகிறது. மாணவர்களதும் பாடசாலைகளதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக கல்வி மந்திரி எமது சங்கத்திற்கு வாக்களித்துள்ளார். எனவே சகல மாணவர்களும் தத்தம் பாடசாலைகளுக்குச் சென்று கல்வியைத் தொடர்வதற்குப் பெற்றோர்களும சமூக இயக்கங்களும் பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டுமென வடமாகாண அதிபர்கள் சங்கம் அன்போடு வேண்டிக்கொள்கிறது. (க)

# புண்ணிய புரட்டாதியில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கும் காரியத்தைச் செய்வது நாராயணன் ‘சாதுக்களை இரட்சிக்கவும், கயவர்களை அழிக்கவும் நான் அடிக்கடி உலகில் பிறக்கிறேன்’ என்ற கண்ணன் கூற்றினைக் கூர்ந்து அவதானித்தல் வேண்டும். நாராயணன் செய்யும் இதே தொழிலைத்தான் சனி பின்பற்றுகிறது. சனிக்குரிய நாள் சனிக்கிழமை, சனிக்கிழமை விஷ்ணுவின் நாளாகவும் கருதப்படுகிறது; பாவிகளைத் தண்டிக்கும் அதே பரமன் நாம் செய்யும் பாவங்களுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டால் கருணை ய உருவான கண்ணன், அவர்கள் செய்த பாவங்களைப் போக்குவார். சனிக்கிழமை தோறும் விஷ்ணு சகஸ்ர நாம பாராயணத்தைச் செய்து வந்தவர்கள், தீராத நோய்களில் இருந்து விடுபட்டிருக்கின்றனர், மாறாத வறுமையிலிருந்து மீண்டிருக்கின்றனர், சனிக்கிழமைகளில் நாராயண விஷ்ணு பூஜையை முறையாகச் செய்து அரும் பெரும் பயன்களை அடைந்தவர் பலர். ஆகவே பாவங்கள் நீங்க, நன்மைகள் பெருக, சனிவார நோன்பும் பூஜையும் சிறந்தனவாகும்.

### ஏன் இத்தனை முக்கியத்துவம்

சனிக்கிழமைகளில் புரட்டாதிச் சனிக்கிழமைகளுக்கு ஏன் இத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என்பதை இப்பொழுது ஆராய்வோம். ஒரு வருடத்தில் பூமத்திய ரேகைக்கு நேராகச் சூரியன் வருவது இரண்டு மாதங்களில்தான். ஒன்று உத்தராயணத்தில் சித்திரை மாதத்தில் இரண்டு தக்ஷணாயத்தில் புரட்டாதி மாதத்தில். சித்திரை முதல் புரட்டாதிவரை ஆறு மாதங்களில் உத்தராயணம் முடிந்து தக்ஷணாயத்தின் முற்பகுதி ஆரம்பமாகிறது. புரட்டாதி மாதம் கன்னியா இராசியில் சூரியன் சஞ்சரிக்கும் நாள். கன்னியா ராசிக்கு உரியவன் புதன்-விஷ்ணு அம்சம். இம்மாதம் முழுவதும், விஷ்ணு சக்தி செயற்படும் வானப்பரப்பில் சஞ்சரிக்கின்றது. விஷ்ணு விஷ்ணுமாதத்தில் விஷ்ணு நாளாகிய சனிக்கிழமை இரண்டு மடங்கு சிறப்புடையது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இது விஞ்ஞான ரீதியிலான முக்கியத்துவம். இனிப் புராண ரீதியிலான புரட்டாதிச் சனிக்கிழமைகளின் முக்கியத்தைப் பார்ப்போம்.

அகலிகைபால் ஈர்ப்புண்டு அடாத செயல்புரிந்த இந்திரன் கௌதம முனிவரால் சபிக்கப்பட்டு உடல் முழுதும் யோனிகளாய் பார்ப்பவர்களுக்கு அவை கண்களாகத் தெரியும்படி சாபம் பெற்றான். யதை பதைத்த இந்திரன் முனிவரிடம் இருந்து சாப விமோசனம் வேண்ட ‘புரட்டாதி மாதச் சனிக்கிழமைகளில் விஷ்ணு தலமொன்றில் நீராடிப் பகவானைப் பூசித்து வந்தால் உன் சாபம் தொலையும்’ என கௌதமர் விமோசனம் மொழிந்தார் இதற்கு இணங்க இந்திரன் நாகர் கோயிலுக்கும், கன்னியாகுமரிக்கும் இடையிலுள்ள சுசீந்தரம் என்ற தலத்தில் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் நீராடி பகவானைப் பூஜீத்துவரஸ்ரீமத்நாராயணன் காட்சியளித்து சாபத்தை நீக்கியருள, இந்திரன் “பகவானே! இப்புண்ணிய மாதத்தில் சனிக்கிழமை பூஜையால் என் சாபம் தொலைந்தது போல், யார் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் நீராடி நோன்புடன் உம்மை வழிபட்டாலும் அவர்களின் பாபங்களைப் போக்கி நல்லருள் தந்தருள வேண்டும்” என்று கேட்டுக்கொள்ள “அப்படியே ஆகுக” என்று வரமளித்தார். அன்று முதல் புரட்டாதிச் சனிக்கிழமை நோன்பு-விரதம் மக்களிடையே பரவலாயிற்று.

விஞ்ஞான வானசாத்திர அடிப்படையிலான சிறப்புப் பொருந்திய நல்ல நாட்களுக்கு பாமர மக்களும் அறியக்கூடியதாகப் பல சம்பவங்களைப் புராணக் கதைகள் வாயில க சமய நெறிப்படுத்தி மக்களை அச்சிறப்புககளில் ஈடுபடுத்தமுயற்சித்து வந்தனர் இத்தகைய கதையே மேற்கூறிய இந்திரன் சாப விமோசனக் கதை.

புரட்டாதிச் சனிக்கிழமைகளில் பக்தர்கள் பகவானைப்பல வழிகளில் வழிபடுகிறார்கள். சனியனின் பீடைகள் விலகுவதற்காக இச்சனிக்கிழமைகளில் எள்ளை முடிந்து எண்ணெயில் இட்டு எரிப்பார்கள். சனிக்கு உகந்த தானியம் எள். இதனை எரிப்பதன்மூலம் சனிப் பிரீதிஏற்பட்டு பாதிப்புக்குறைகிறது. மேலும் பக்தர்கள் ஒன்றுகூடி பெரியதொரு குத்து விளக்கேற்றி வைத்து துணியால் செய்த தீப்பநதங்களை ஏந்திப்பிடித்து பகவானின் நாமத்தைச் சொல்லி விளக்கைச் சுற்றி வருவார்கள். தீப்பந்தங்கள் சுட்டெரிக்கும் சக்தியின் சின்னம்.

# மரியாளும் தாய்மையும்



அன்னை என்ற சொல் கேட்டவுடன் அவனியிலுள்ள அனைவரின் உள்ளங்களிலும் ஓர் அன்புணர்வு பிறக்கிறது. ஏனெனில் அன்பின் இருப்பிடம் அன்னை தான். தாயன் பிற்கோர் எல்லையில்லை. அதை ஏற்ற வகையில் எடுத்துரைக்க நாவில்லை, எழுத ஏடில்லை, சொல்ல மொழியில்லை. தாயின் அன்பினிலே தூய்மை, பராமரிப்பு, பொறுமை, உண்மை தியாகத்தன்மை மகிழ்ச்சி என்பன விண்மீன் கூட்டமென மின்னுகின்றன. இந்நற்குணங்கள் யாவும் அன்னை மரியாளிடத்தில் மிக உன்னத அளவில் பரிணமித்தன என்பதை நாம் வேதாகமத்தின் நற்செய்தி ஏடுகளில் காணலாம்.

வார்த்தையானவர் மனுவுருவேற்ற கணம் தொடங்கி மரியாள் தன் தாய்மையின் கடமையை, இறைவனின் திட்டப்படி ஓர் அணுவும் பிசகாது நிறை வேற்றினாள். தன் தலைப்பேறான மகனை ஈன்ற போதும், மகிழ்ச்சி நிறைந்த இதயத்தோடு அவரை இடையர்களுக்கும், மூன்று ஞானிகளுக்கும் காட்டிய போதும், அவரை யேசு என அழைத்த போதும், அவரை கோவிலில் காணிக்கையாக வைத்த போதும், காணமற் போன அவரைத் தேடி கோவிலில் கண்டு கொண்ட போதும் நாம் மரியன்னையின் தாய்மையை கண்கூடாக காண்கிறோம். தாயான அவள் தன் குழந்தையாகிய மீட்பரை அன்போடு பாலூட்டி, உணவூட்டி தன் துன்ப துயரங்களை கவனியாது இரவும் பகலும் உழைத்து வளர்த்த செல்வமகன் பேசும் வார்த்தைகளையும், செய்யும் செயல்களையும் தனதுமனதில் பதித்து கொண்டாள் மகனின் வாழ்க்கையோடு ஒன்றித்திருந்தாள்.

பல இன்னல் இக்கட்டுகளினிடையே இன்னும் பயணம் செய்து கொண்டிருக்கும் தன் பிள்ளைகளை, அவர்கள் தங்கள் மகிழ்ச்சிநிறை தாய்நாடுசேரும் வரை தாய்க்குரிய அன்போடு காத்து வருகிறாள். நாமும் பிள்ளைக்குரிய உரிமையுடன் எங்கள் இடர்கள் தேவைகள் அனைத்திலும் அவளை மன்றாடி அவளது பாதுகாவலில் புனிதமடைவோம். அதன் மூலம் அவளைப் பெருமைப் படுத்துவோம். நாம் தாயைப் பெருமைப் படுத்தும் போது அதன் மூலம் மகனை அறிந்து அன்பு செய்து, அவரையும் மாட்சிமைப் படுத்துகிறோம்.

—எம். பிறிம்றேஸ்

[சாட்டி மாதா ஆலயதிருவிழா நாளை மறுதினம் நடைபெறுகிறது]

## சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை:
# யாழ்ப்பாணத்தில் இம்முறை இல்லை

(சித்தன்கேணி)

அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள சிங்களத் தேர்ச்சி எழுத்து மூலப்பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாது.

அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு டிசம்பர் மாதம் 1ம் திகதி நடைபெறவுள்ள சிங்களத் தேர்ச்சி எழுத்துப் பரீட்சைக்கு இம் மாதம் 14ம் திகதி வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. அவ்விளம்பரத்தில் பரீட்சை நடைபெறும் இடங்கள் கொழும்பு, புத்தளம், அநுராதபுரம், பொலநறுவை, அம்பாறை, பதுளை, காலி, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கண்டி, ஆகியன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதலால் யாழ். மாவட்ட அரசாங்கசேவை உத்தியோகத்தர்கள் அநுராதபுரத்துக்கே பரீட்சைஎடுக்கச் செல்லவேண்டியுள்ளது. இந்த வருடமே முதன்முறையாக எழுத்துப் பரீட்சையும், வாய்மூலப் பரீட்சையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது.

# கடத்தப்பட்ட ‘அம்புலன்ஸ்’ கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து கடத்தப்பட்ட அம்புலன்ஸ் வண்டி நேற்றுக்காலை 8 மணியளவில் யாழ். கன்னாதிட்டிச் சந்தியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இனந்தெரியாத இருநபர்கள் துப்பாக்கிமுனையில் கடத்திச் சென்றது தெரிந்ததே.

அம்புலன்ஸ் வண்டி கடத்தப்பட்டபின்னர் சுமார் 150 மைல் தூரம் ஓடியிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது. (மா)

# 'கிராம அபிவிருத்திக்கு கி.மு. சங்கங்கள் உதவவேண்டும்'

(அச்சுவேலி)

''கிராமங்களின் அபிவிருத்தி கிராம முன்னேற்றச் சங்கங்களின் கையில் தங்கியுள்ளது. ஆகவே இத்தாபனத்தை ஒற்றுமையாகவும், கட்டுப்பாடாகவும் நடத்திக் கிராமத்தை முன்னேற்றவேண்டும்.''

இவ்வாறு தம்பாலை கிராம முன்னேற்றச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வலி-கிழக்கு [கோப்பாய்] உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது

''கிராம முன்னேற்றச் சங்கங்கள் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், விளையாட்டு, சிரமதானம் போன்ற செயல் திட்டங்களில் ஈடுபடவேண்டும். இன்று யாழ்ப்பாணத்தில் அநேக இடங்களில் கிராமோதய சபைகள் இயங்காததால் கிராமமுன்னேற்றச் சங்கங்களே கிராமோதய சபையின் இடத்தை நிரப்பவல்லன எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கி. மு சங்கமும் திணைக்களங்களின் ஒப்பந்த வேலைகளைப் பெற்றுக் கிராமத்தை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும் என்றார்.

கிராம அபிவிருத்தி அலுவலர் திரு. த. பஞ்சலிங்கம், விசேடசேவை அலுவலர் திரு கே. மகாலிங்கம், திரு. ஆ. கந்தசாமி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

# இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி

திகதி—5(21-09-1984)

வாரம்—வெள்ளி

திதி—ஏகாதசி காலை 6-33 ன் மேல் துவாதசி

நக்ஷத்திரம்— பூசம் முன் இரவு6-28 வரை

மேடம்:- கடமையில் புதிய ஆர்வம் கிடைக்கும் எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள் ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும்.

இடபம்:- வருமானத்தில் அபிவிருத்தி காணப்படுகிறது கடந்த சில நாட்களாக நிலவி வந்த தயக்க நிலையில் இன்று நல்ல திருப்பம் ஏற்படும்.

மிதுனம்:- தானியத்துறையில் நஷ்டமேற்படும் கொடுக்கல் வாங்கல் மூலம் சண்டைகள் மூள முடியும் உடன் தொழிலாற்றுவோர் உளவு வேலையில் இறங்கக் கூடும்.

கடகம்:- இதயம் எரிமலை போல் குமுறும் உள் வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும் குழந்தையொன்றின் உடல் நலம்பாதிக்கப்படலாம்.

சிங்கம்:- நண்பர்களின்உபத்திரவங்கள் அதிகமாகும் கடன் படவும் நேரிடலாம் நம்பிக்கை மோசடியும் நடக்கும் எனவே அவதானம்வேண்டும்.

கன்னி:- வாழ்க்கை மந்த கதியில் நடைபெறும் எதிர்பாராத தடைகளால் முன்னேற்றம் பாதிக்கப்படலாம் சகோதரவழி மூலம் சஞ்சலமான செய்தியும் கிடைக்கும்.

துலாம்:- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு தாய்வழி ஆதரவு தாராளமாக கிடைக்கும்.

விருச்சிகம்:- புத்திரர் வழியால் புகழ் வந்துசேரும் வெளியூர் புதினம் உண்டு குடுப்பத்தில் சுகமான நிலைதென்படும் புதிய தொடர்புகள் ஏற்படும்

தனுசு;- துன்பத்தின் ரேகை படரும் எதற்கெடுத்தாலும் சீறிவிழுவீர்கள் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் ஏமாற்றமடைய நேரும் தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றி மறையும்.

மகரம்;- காதல் விவகாரங்கள் தலை தூக்கும் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும் களஸ் திரவழியால் பொருள் வரவிற்கும் இடமேற்படும்.

கும்பம்:- எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தைதரும் எதிரிகளின் சூழ்ச்சி பலமாகஇருக்கும் பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும் தனி வழிப்பயணத்தைத் தவிர்த்தல் நன்று.

மீனம்:- தக்க சமயத்தில் தநதையின் ஆதரவு கிடைக்கும் தெய்வ நம்பிக்கை மேலிடும் ஸ்தலயாத்திரை ஒன்று மேற் கொள்ளப்படலாம்.

திருமலை

வே. ரவீந்திரன்

## வெள்ளி விழாவும் மலர் வெளியீடும்

(புலோலி)

கரவெட்டி புனிதலூர்த்து அன்னைகார்மேல் மட வெள்ளி விழாவும் மலர் வெளியீடும் நாளை நடைபெறவுள்ளன.

யாழ் ஆயர் பேரருட் திரு. கலாநிதி வ தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் திருப்பலியை ஒப்புக் கொடுத்து விழாவை ஆரம்பித்து வைப்பார்.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை முருகன்கோவில் கும்பாபிஷேகம் புதிதாக அமைக்கப்பட்ட தரிசன மண்டபத்தில் இன்று நண்பகல் ஆரம்பமாகவுள்ளது.

SIVAKEE Poly Technical Institute

MANIPAY.

எமது நிறுவனத்தில் பின்வரும் வகுப்புகள்

மிகவும் குறைந்த செலவில்

அனுபவமும், திறமையுமுள்ள முதல்தரமான CHARTERED ENGINEERS, ACCOUNTANTSஆல்

27-9-84 காலை 9 00 மணிக்கு விரிவுரை வகுப்புகள் ஆரம்பமாகும்

20 9 84 தொடக்கம் பதிவு செய்யலாம்

23 9 84 நேர்முகப்பரீட்சை.

உடன விண்ணப்பங்களை அனுப்பவும்

LOND. EXAMS

1 .QUANTITY SURVEYING 2 எலெக்ரிக்கல் எஞ்ஜினியரிங் 3 ரெக்னீசியன் DIPLOMA IN CIVIL ENG AND BUILDING 4. DIPLOMA IN DRAUGHTS MANSHIP 6. I. C.M.A. A and B (85) I.A.A. PART 1. 7. CHARTERED PRELIMINARY.

முகவரி:

Sivakee Poly Technical Institute

மூறுமலை வீதி, மானிப்பாய்.

# செய்திச்சிதறல்

## பங்குத் தந்தையாக நியமனம்

(புலோலி)

பருத்தித்துறை பங்குத் தந்தையாக அருட் திரு.பஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் பொனிபேஸ் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் கொழும்புத்துறை பிரான்சிஸ் சவேரியார் குருமட விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

## மீண்டும் 'மைசூர்' பருப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கூட்டுறவு மொத்த விற்பனைஸ்தாபனத்திற்கு மீண்டும் மைசூர்பருப்பு வந்துள்ளது.

ப.நோ கூசங்கங்கள்மூலமும் அங் கீகரிக்கப்பட்ட வியாபாரிகள் கடைகள் மூலமும் மைசூர் பருப்பு வழங்கப்பட்டுவருகிறது மைசூர் பருப்புஒருகிலோ 18ரூபா வாக விற்பனைசெய்யப் பட்டுவருகிறது.

## தொல்புரம் வெற்றி

(வண்ணார்பண்ணை)

சுழிபுரம் பருளாய் விளையாட்டுக்கழகத்திற்கும் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தொல்புரம் மத்திய சனசமூக விளையாட்டுக் கோஷ்டி 8-2 கால்களால் வெற்றியீட்டியது. தொல்புரம் பொக்கணை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு மு.சடாட்சரம் மத்தியட் சகராக கடமையாற்றினர்.

## நல்ல வரவேற்பு

[வண்ணார்பண்ணை]

நவீன முறைகளில் தற்பொழுது தயாரிக்கப்படும் பனை ஓலையினலான உற்பத்திப் பொருட்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தின்போது பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் விற்பனை நிலையம் பத்துத் தினங்கள் அங்கு உற்பத்திப் பொருட்கள் அறிமுக விற்பனையைச் செய்தபோது 21,903, 60 க்கு இப் பொருட்களை விற்பனை செய்ததாக இச்சபையின் சந்தைபடுத்தும்அலுவலர் திரு வ. திவ்யராசா நிருபருக்குத் தெரிவித்தார்.

## பண்டத்தரிப்பு சுகாதாரக்குழு

[பண்டத்தரிப்பு]

ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு பகுதியில் சுகாதாரக் குழுவொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது. பண்டத்தரிப்பு பொது நூலகவாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுகாதாரக்குழு நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் - அன்னை யூலாலி அவர்கள், உப தலைவர்:- திருமதி ரூபி ஜசுதாசன், செயலாளர்:- செல்வி மேரி லூஸ் பொருளாளர்;- திரு எஸ். ரி. கதிரவேற்பிள்ளை செயற்குழு உறுப்பினர்களாக 13 பேர் தெரிவாயினர்.

## கருத்தரங்கு

[வண்ணார்பண்ணை]

தொல்புரம் மத்தி கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான கருத்தரங்கு சனிக்கிழமை மாலை தொல்புரம் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது

இளைப்பாறிய ஆசிரியரும், சமூக சேவையாளருமான திரு கா. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தொல்புரம் மத்தியில் எடுக்க வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள், ஒழுக்க நடைமுறைகள், சமய அறிவு விஸ்தரிப்பு, கல்வி வளர்ச்சி, சுகாதார வசதிகள் என்பனபற்றி ஆராயப்பட்டன.

## அடகு நகைகள் கதி

[மன்னார்]

மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் நகைகளை அடகு வைத்தவர்கள் வட்டியுடன் அடகு வைத்துப் பெற்ற பணத்தையும் திருப்பிச் செலுத்தி பல மாதங்களாகியும் நகைகளை மீட்க முடியாததால் பலர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

## நன்றி

[சித்தன்கேணி]

வதிரி தமிழ்மன்ற மாதர் அபிவிருத்தி சங்கத்திற்கு மூன்று தையல் மெஷின்களை கிராமிய மீளமைப்பு நிறுவனம் வழங்கியுள்ளது.

இதற்கு நன்றி தெரிவித்து சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் செல்வி சிவதேவி-சிவராசலிங்கம் கிராமிய மீளமைப்பு நிறுவன அதிகாரிகள் செல்வி புஷ்பராணி சிவப்பிரகாசம், திரு க. சிவபாலன் ஆகியோருக்கு தையல் மெஷின்களை தனது விடா முயற்சியினுல் பெற்றுக்கொடுத்து கரவெட்டி வடக்கு விஷேட அலுவலர் திரு தி. வரதராசனுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

## சிரமதானம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி செல்வநகரில் ஆனந்தநகர் கிராம முன்னேற்றச்சங்கத்தினர் சிரமதானப் பணிஒன்றில் ஈடுபட்டுள்ளனர். செல்வநகர் பிள்ளையார் ஆலயம் ஒன்றை அமைக்குமுகமாக புத மண்டிக்கிடந்த சுமார் 3 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி ஒன்றையும் சிரமதானிகள் புனர் நிர்மாணம் செய்தனர். ச. சிதம்பரப்பிள்ளை தலைமையில் 75 பேர் சிரமதானத்தில் பங்கு கொண்டனர்.

## உற்சவம்

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்ட சித்திவிநாயகர் ஆலய வருடாந்த ஆவணி சதுர்த்தி உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது இவ் உற்சவத்தில் பெரும்தொகையான அடியார்கள் கலந்து கொண்டனர். பண்இசை, பக்திப் பாடல்கள் சமயச் சொற்பொழிவுகளும் இடம் பெற்றது.

## சிற்பகலா சிரோமணி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை - சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய மகாகும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றபோது புனருத்தாரண திருப்பணி வேலைகளைச் சிறப்பாக மேற்கொண்டமையைப் பாராட்டி அராலியூர் ஸ்தபதி திரு. வி. தம்பிராசாவுக்கு ''சிற்பகலா சிரோமணி'' என்ற பட்டம் வழங்கப்பட்டது. ஆலயபரிபாலன சபைத் தலைவர் சட்டத்தாணி எஸ். ஆர் கனகநாயகம் இப் பட்டத்தைத் திரு. தம்பிராசாவுக்கு வழங்கிக் கௌரவித்தார்.

## புனரமைப்பு

(பருத்தித்துறை)

[illegible] சினர் ஆஸ்பத்திரி அபிவிருத்தி சபையின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் [illegible] பிரதம வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெறும் சென்ற வாரம் கூட்டப்படவிருந்த கூட்டம் கோரமின்மையால் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## பயிற்சி வகுப்புகள்

(கொழும்புத்துறை)

திட்ட அமுலாக்கல் அமைச்சின் உணவுப் போஷாக்கு வாரத்தை முன்னிட்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் போஷாக்குணவுப் பயிற்சி நெறிகள் நடாத்தப் பட்டு வருகின்றன.

தற்போது வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் போஷாக்கு உணவுப் பயிற்சி வகுப்பு ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது இப்பயிற்சி வகுப்பில் ஐம்பது யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## மகாநாடு

(கொழும்புத்துறை)

சர்வதேச மரத்தொழில் நுட்பம் சம்பந்தமான ஆய்வாளர்களைக் கொண்ட மகாநாடு அடுத்த மாதம் 24ம், 25ம், 26ம் திகதிகளில்மொறட்டுவையில்நடை பெறவுள்ளது.

இந்த மகாநாட்டில் மரம் வளர்ப்பு, பயன்படுத்துதல் பற்றி ஆராயப்படுவதுடன் பனைமரம் பற்றிய ஆய்வுரைகள் நிகழ்த்தப்படவுள்ளது.

## விவசாயிகள் கவலை

(கிளிநொச்சி)

அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது சிறுபோக அறுவடை நடைபெற்றுவருகின்றது. கபிலத்தத்தி என்னும் ஒருவித நோயினுல் இம்முறை சிறுபோக வேளாண்மை பெரிதும் பாதித்ததால் அறுவடையின் போது விவசாயிகள் எதிர்பார்த்து அளவு விளைச்சல் கிடைக்கவில்லையென இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

## இலவச பயிற்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-பரந்தன் ரோட்டறிக் கழகத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் வாய்ப்பற்றிருக்கும் இளைஞர்களுக்குச் செய்தொழில்பயிற்சி அளிக்கும்முகமாக மின்இணைப்புத்துறையில் ஆறுமாத கால இலவச பயிற்சிநெறி ஒன்றை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்கான ஏற்பாடுகளைப் பிரஸ்தாப கழகத் தலைவர் திரு. பா. வை. ஜெயபாலனும் மின்னிணைப்புப் பயிற்சிக்குப் பொறுப்பான ரோட்டறியன் எஸ் சிவகுருநாதனும் செய்துள்ளனர்.

## பரிசு வழங்கும் வைபவம்

(பண்டத்தரிப்பு)

கீரிமலை சிவநெறிக் கழகம் அண்மையில் நடாத்திய நீதிச் செய்யுள் மனனப் போட்டி, புராணபடனப்போட்டி, கதாப் பிரசங்கப் போட்டி ஆகிய போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுபெறத் தெரிவுசெய்யப் பட்ட மாணவ, மாணவிகளுக்குப் பரிசு வழங்கும்வைபவம் இம்மாதம் 30-ம் திகதி பருத்தித்துறையிலும், அடுத்த மாதம் 6-ம் திகதி கீரிமலையிலும் நடைபெறவுள்ளது.

## ரூபவாஹினி...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

6-40 மருத்துவ அறிக்கை (ஆங்கிலம்)

6-55 செய்திகள் (தமிழ்)

7-15 ஜப்பான் ஆராய்ச்சி நிறுவனத்தின் 75வது ஆண்டு நிறைவு

7-45 பொது அறிவு நிகழ்ச்சி (சிங்களம்)

8-15 செய்திகள் (சிங்களம்)

8-35 கலை நிகழ்ச்சி சிங்களம்

9-00 'கஸெந்திராகுறொஸிங்' திரைப்படம்(ஆங்கிலம்)

9-30 செய்திகள் (ஆங்கிலம்)

9-50 திரைப்படத்தொடர்ச்சி

10-30 உலகச் செய்திகள்

10-35 திரைப்படத்தொடர்ச்சி

11-30 நிகழ்ச்சிகள் முடிவு

# சேதமான பொருட்களுக்கு உபதபால் அதிபரே நஷ்ட ஈடுகட்ட வேண்டும்!

(சித்தங்கேணி)

சங்குவேலி உபதபாற் கந்தோர் அதிபருக்கு 1983-ம் ஆண்டு ஜூலை மாதம் இடம் பெற்ற சம்பவத்தின்போது சேதமாக்கப்பட்ட பொருட்களுக்கு சுமார் ஐயாயிரம் ரூபா கட்டுமாறு தபால் மா அதிபரினுல் கடிதம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

கடந்த வருடம் யாழ்.மாவட்டத்திலுள்ள 13 உபதபாற் கந்தோர்களில் ரொக்கப்பணம் கொள்ளையடிக்கப்பட்டதுடன் சில உப தபாற் கந்தோர் நிலையங்களில் உள்ள பொருட்கள் சேதமாக்கப்பட்டது.

சங்குவேலி உபதபாற் கந்தோரில் சேதமாக்கப்பட்ட மணிக்கூடு, தராசு, டெலிபோன் போன்ற பொருட்களின் பெறுதி ரூபா ஐயாயிரத்தைக் கட்டுமாறு தபால் மா அதிபரினுல் உப தபால் அதிபருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதே போல கொள்ளையடிக்கப்பட்ட 13 உப தபால் அதிபர்களுக்கும் கொள்ளை போன பணத்தை முதலில் கட்டுமாறு தபால் மா அதிபரினுல் கடிதம் அனுப்பப்பட்டதாகவும் பின்பு சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்டதாகவும் சம்பந்தப்பட்ட உபதபால் அதிபர்கள் கூறினுர்கள்.

ஆகக் கூடுதலான பணம் கொள்ளையடிக்கப்பட்ட உப தபாற் கந்தோர்களில் சித்தன்கேணி உப தபாற் கந்தோரும் ஒன்ருகும்.

இந்த உப தபாற் கந்தோர் அதிபரின் சம்பளத்தில் இருந்து மாதம் தோறும் சுமார் 300 ரூபா கழிக்கப்பட்டு வருகிறது.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமலஹாசன்-சுஜாதா
அவள் ஒரு தொடர் கதை

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30,
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
ஒருதாய்மக்கள்
— புதிய பிரதி —

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சுந்தரராஜன் —
ஏ. வி. எம். ராஜன்
ஜெயலலிதா
மேஜர் சந்திரகாந்த்

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா-நம்பியார்
அரசகட்டளை
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி.

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரஜனி காந்த்
தில்லு முல்லு
(கலர்)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30 2-00
சிவாஜி - கே.ஆர்.விஜயா
தவப்புதல்வன்
(புதிய பிரதி)

**வின்ஸர்** [யாழ்.]
Today Only
தினசரி 10-30, 2-00, 4-30
Charles Bronson
in
AVALANCHE
EXPRESS
(Colour - Action Packed)

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் - ராதிகா
நாகேஷ்
மறைந்த டிங்கிரி
கனகரெட்ணம்-
எஸ். தர்மலிங்கம்
ரத்தத்தின் ரத்தமே
(புதியபிரதி - ஈஸ்மன்கலர்)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
THE BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00,
சிவாஜி-சாரதா-
சுந்தரராஜன்
நடித்த
ஞான ஒளி
இந்தியாவிலிருந்து பிரத்தியேகமாக பெறப்பட்ட புதிய கொப்பி

# யாழ் பள்ளிவாசல் குளம் சிரமதானம் மூலம் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மூர்வீதியிலுள்ள பெரிய பள்ளிவாசலில் இருக்கும் வற்ருக்குளத்தை முஸ்லிம் இளைஞர்கள் சிரமதானம் மூலம் சுத்தம் செய்து வருகின்றனர் கடந்த இரு வாரங்களாக இந்த திருத்த வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து வருகின்றனர். இச்சிரமதானத்தில் முன்னின்று பணிசெய்யும் இஸ்மாயில் சின்னத்தம்பிக்கும் அவரோடு சேர்ந்த சகாக்களுக்கும் முள்ளியான் முஹிதின் பள்ளிவாசல் சங்கத்தலைவர் ஜனுப் வி.அபூபக்கரும், தனுதிகாரி எஸ். ஏ ஸி சஹாப்தீனும் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

## சங்காபிஷேகம்

(யாழ்ப் ாணம்)

மண்டதீவு கண்டுபுளியடி வீரபத்திரர் கோவில் சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

நியாய சிரோமணி கி. சுப்பிரமணியசாஸ்திரிகள் தலைமையில் சங்காபிஷேக கிரியைகள் இடம் பெறும். இன்று புலவர் ஈழத்து சிவானந்தனின் சமயச் சொற்பொழிவும் இடம் பெறும்,

## மன்னுரில் குடிநீர்க் கிணறுகள்

(மன்னுர்)

மன்னுர் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் மன்னுர் மாவட்ட அபிவிருத்தி சபை கிராமப்புறங்களில் 10 குடிநீர்க் கிணறுகளை அமைக்கவுள்ளது.

இத்திட்டத்திற்கென மொத்தம் 2லட்சத்து 58ஆயிரத்து 500 ரூபா செலவிடப்படும்.

## விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்

(கோண்டாவில்)

வீதியால் வந்த ஆயுதப் படையினர் சந்தையில் மீன் வாங்கிய இரு இளைஞர்களை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். இச்சம்பவம் நேற்றுக்காலை கொக்குவில் சந்தியில் இடம் பெற்றது.

மீன்வாங்கும் இடத்தில் வாகனத்தை நிறுத்தி அடையாள அட்டைகளைப் பரிசோதித்ததாகவும் பின்னர் அவ் விரு இளைஞர்களையும் அழைத்துச்சென்றதாகவும் கூறப் பட்டது.

## ஓய்வூதியம்

(மாவிட்டபுரம்)

வசாவிளான் பகுதியிலுள்ள பென்சன்காரருக்கு வசாவிளான் தபால் நிலையத்திலேயே ஓய்வூதியம் வழங்கப் பட்டது.

வசாவிளான் பகுதியிலுள்ளவர்களுக்குக் கடந்த மூன்று தினங்களாக ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

100 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டதாக மேற்படி தபால் நிலைய அதிபர் திரு. சி. தர்மராஜன் தெரிவித்தார்.

## சிரமதானம்

(கிளிநொச்சி)

உமையாள்புரம் பிரதான வீதியை இப்பகுதி மக்கள் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்தனர்.

விசேடசேவை அலுவலர் இ.தியாகராசா தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான வைபவத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் பொ. அருளம்பலம் மாதர் சங்கத்தலைவி மு.கமலா தேவி ஆகியோர் சிரமதானத்தை ஆரம்பித்து வைத்தனர்

# மரம்தவறி வீழ்ந்து இளைஞர் மரணம்

(சாவகச்சேரி)

குடும்பத்தின் கஷ்டநிலை காரணமாக இளவயதிலேயே மரம் வெட்டும் தொழிலில் ஈடுபட்டுவந்த இளம் தொழிலாளியான அப்பாப்பிள்ளை மோகன் (வயது17) என்பவர் தறித்து வீழ்த்திய பனைமரத்தினைத் துண்டாக்கித் தூக்கிச் சென்ற சமயம் மரம் வெறி வீழ்ந்ததால் திடீர் மரணமெய்தினுர்.

இவ் இளம் தொழிலாளி மறவன்புலோப்பகுதியில் மரம் வெட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயமே இவ்வாறு மரண மானுர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நடை பெற்ற பிரேத பரிசோதனையை சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். நீ. சோமசுந்தரம் நடத்திஞர்.

திடீர் மரண விசாரணை அதிகாரியான என்.தர்மேந்திரன் மரண விசாரணையை மேற்கொண்டார். அவர் தமது தீர்ப்பின் போது ''பனைமரம் தூக்கிய போது வீழ்ந்ததால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தெரிவித்துள்ளார்,

# "சிந்தித்து இயங்கும் இலக்கியவாதி ஜீவா!"

## மல்லிகை விழாவில் செம்பியன் செல்வன்

(யாழ்ப்பாணம்)

''ஈழத்து இலக்கியவளர்ச்சிக்கு ஜீவா ஆற்றிவரும்பணி மிக்க மகத்தானது ஈழத்து இலக்கியம்பற்றி அதன் பன்முகப்படுத்தப்பட்ட கிளைகள் பற்றி அவர் சிந்தித்து இயங்கி வருகின்ருர்.

இவ்வாறு மல்லிகை சஞ்சிகையின் இருபதாவது ஆண்டு பூர்த்தியை ஒட்டி நடைபெற்ற வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் திரு. செம்பியன் செல்வன் எடுத்துக்கூறினுர்.

மல்லிகை சஞ்சிகை வெளியீட்டு காரியாலய பின்மண்டபத்தில் திரு வ. இராசையா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. செம்பியன் மேலும் பேசுகையில் திரு. ஜீவாவின் கடின உழைப்பும், சலியாத முயற்சியுமே மல்லிகை தொடர்ந்து வளர்ந்து வருவதற்கு பிரதானகாரணம் எனக்குறிப்பிட்டார். ஈழஇலக்கியப் படைப்புக்களை தமிழகத்தில்பரப்ப ஜீவா தன்னுலானமுயற்சிகளை மேற்கொண்டுவருகிருர் எனவும் எடுத்துக் கூறினுர்.

திரு. த. பத்மநாதன் தமது உரையில் மல்லிகையில் தரமான விஷயங்கள் வருவதால் அதை எல்லோருமே படிக்கலாம் என்ருர்.

திரு. ஏ ரி. பொன்னுத்துரை, பேசுகையில் திரு. ஜீவா இரசிகமணி கனகசெந்திநாதனுல் வளர்க்கப்பட்டவர் எனக்குறிப்பிட்டார்.

திருவாளர்கள் ச. பத்மநாதன், செங்கை ஆழியான் உட்பட வேறுபலரும் திரு. ஜீவாவின் இலக்கியப்பணிபற்றியும் மல்லிகையின் இலக்கியச் சிறப்புப்பற்றியும் பாராட்டிப்பேசினுர்கள்.

திரு. ஜீவா தமது நன்றி உரையில் ஒருஇலக்கிய வாதிக்கு ஒரு சமுதாயக்கடமை இருக்கின்றது எனவும் வாசகர்களின்நல்ல ஆதரவால்தான் ஒரு பத்திரிகை வாழமுடியும் எனவும் கூறினுர்.

# மூதூரில்கைதான இரு தமிழ்ப்பெண்கள்!

[திருகோணமலை]

மூதூர்த் தொகுதியைச் சேர்ந்த இரண்டு இளம் தமிழ்ப் பெண்கள், ஆயுதப் படையினரால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வார இறுதியில் கைதாகிய இந்த இரு பெண்களிடமும் தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் வெளியீடுகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

இவர்கள் இரண்டு பேரும் பொலிஸ் விசாரணையின் பின்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

CITY & GUILDS CLASSES
JASE INSTITUTES
(டில்கா மேல்மாடி)
404/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
1985, மே/யூன் பரீட்சைக்கான
ELECTRICAL TECHNICIANS COURSE
PART 2 and 3
ஆரம்பம்: 6-10-84ல்
விண்ணப்பங்கள்! 22-9-84 முதல் 30-9-84 வரை
நடைபெறும் ஏனைய வகுப்புக்கள்;
(லண்டன்) T1, T2, T3.
E. C. E (C. E. I) B. A. G A, Q. (இலங்கை)
SHORT HAND TYPEWRITING (ENGLISH)
தகுதியும், திறமையும், நீண்டகால அனுபவமும் கொண்ட ஆசிரியர்களின் வழிகாட்டலைப் பயன்படுத்த உடன் தொடர்பு கொண்டு உங்கள் சித்தியை உறுதிப்படுத்துங்கள்.
நிர்வாகி,
JASE.

# அந்தியேட்டி அழைப்பு

## திருமதி இராசம்மா சின்னையா



தோற்றம்:
4-6-1902

மறைவு:
23-8-1984

உரும்பிராய் கிழக்கு சைவவேளாண் குலத்தைச் சேர்ந்த திருமதி இராசம்மா சின்னையாவின அந்தியேட்டி நாளை சனிக்கிழமை (22-09-84) அன்னுரின் இல்லத்தில் நிகழவிருப்பதால் அனைவரும் கலந்து கொண்டு அன்னுரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்ருேம்.

அன்பு மகன்மார், மகள்மார், மருமக்கள்மார்,
மற்றும் உறவினர்கள்.

'கரந்தன்', உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். 1862

யாழ். செயலகத்தில் கொள்ளையடிக்கப்பட்ட

# பெறுமதிமிக்க முத்திரைகளை ஒப்படைக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ் செயலகத்தில் இனந் தெரியாதவர்களினால் நேற்றுக் காலை துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்ட பெறுமதிமிக்க முத்திரைகளை பொது மக்களின் நன்மைகருதி திருப்பி ஒப்படைக்கவும்''

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் அவர்; ''இந்த விலையுயர்ந்த முத்திரைகளை அதிகளவில் கச்சேரி, தபால் நிலையங்களில்தான் பெறமுடியும். இதேபோன்று அதிகாரமளிக்கப்பட்ட இடங்கள் தவிர ஏனைய இடங்களில் இம்முத்திரைகளைப் பெறமுடியாது'' என்றும் தெரிவித்துள்ளார்.

## கடற்கரைப்பகுதியிலிருந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த அவரது கணவன் த. தங்கத்துரை (24வயது)நேற்று மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ் நாகராசா முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

### 12 பேர் இருந்தோம்

த. தங்கத்துரை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''இறந்தவர் எனது மனைவி சம்பவம் நடந்த தினம் ஒரு கோவில் திருவிழா நடந்தது. அதன்பின் வீட்டில் 12 பேர் வரை படுத்திருந்தோம்.

''நானும் மனைவியும் ஒரு அறையில் படுத்திருந்தோம் மற்றவர்கள் அடுத்த அறையிலும், திண்ணையிலும் படுத்திருந்தார்கள். எனது மாமியார் வீட்டில் தான் படுத்திருந்தோம். அது ஒரு பனை ஓலைக்குடிசை. மச்சாள், மாமி, தாய், தகப்பன், சகோதரர்கள் படுத்திருந்தோம்.

### வெடிச்சத்தம் கேட்டது

''இரவு 9-30 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் வெடிச்சத்தம் கேட்டது. அப்புறம் நெருப்புப்பந்தம் போல் ஒன்று கூரையைப் பிய்த்துக் கொண்டு வந்து என் மீது விழுந்தது.

''என் இருதோள்மூட்டிலும் இடது காலிலும் முதுகிலும் காயங்கள் ஏற்பட்டன.

[நீதவான் காயங்களை பார்வையிடுகிருர்]

### இரத்தம் பீறிட்டது

''நாங்கள் பாயில் படுத்திருந்தோம். நான் எழும்பிப் பார்த்தபோது என்மனைவியின் தலையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நான் குளறினேன். எதிர் வீட்டிலிருந்து அண்ணன் செல்லத்துரை வந்தார். எனக்குத் தலையைச்சுற்றி மயக்கமாக இருந்தது. ஒருவானில் என்னையும் மனைவியையும் ஏற்றிக்கொண்டு மந்திகை ஆஸ்பத்திரிக்கு சென்றுர்கள். அங்கு எனக்கு ஊசிமருந்து ஏற்றப்பட்டது. என்மனைவி யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்

''15-ம் தேதி இரவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன்.

''மறுநாள் ஆஸ்பத்திரிக்கு அண்ணன் வந்து வீட்டிற்கு வரும்படி கூறினர். அப்போது என் மனைவி இறந்தது எனக்குத் தெரியாது. நான் வீட்டிற்கு போய் இருந்த போது சடலம்வந்தது. அப்பொழுதே மனைவி இறந்ததுபற்றி அறிந்தேன்.

நீதவான்: காயமேற்பட்டது எப்போ? சனிக்கிழமை

நீதவான்; சடலம் வந்தது? ஞாயிற்றுக்கிழமை இரவு திங்கள் காலை 10 மணிக்கு பிரேதம் எடுக்கப்பட்டது. எனக்கு எதிரிகள் எவரும் இல்லை வீட்டிலிருந்து அண்ணன் குண்டு எடுத்து ஆஸ்பத்திரியில் கொடுத்ததாகச் சொன்னர். குண்டுதான் வீசப்பட்டது. பனைமரங்கள் எல்லாம் குண்டினால் அறுக்கப்பட்டிருந்தன.

''கடற்கரைப் பகுதியில் இருந்து தான் குண்டு வந்தது. கடற்கரை எனது வீட்டிலிருந்து ஒன்றரை மைலுக்கு அப்பால் உள்ளது. கடலுக்கும் என் வீட்டிற்கும் இடையில் பனை வளவுகள் உண்டு. கூப்பிடு தூரம் வரை பனைகள் குண்டினால் துளைக்கப்பட்டிருந்தன. ஆஸ்பத்திரியால்வந்த பின் இதனைப் போய் பார்த்தேன்.

வல்வெட்டித்துறைபொலிஸ் சார்ஜன்ட் பூவிலிங்கம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும். (க)

## செயலகத்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருர்கள்.

அவர்கள் நேராக மேல் மாடிக்குச் சென்று அரசாங்க அதிபரின் காரியாலய வாசல் கதவிற்கு முன் அமர்ந்து கொண்டு அழுதார்கள். கைக்குழந்தையுடன் ஒரு தாயும் அங்கு காணப்பட்டார். ஒரு சிறுவனும் தாய்க்குப் பக்கத்திலிருந்தான்.

அரசாங்க அதிபரை வடமராட்சி பிரஜைகள்குழு பிரதிநிதிகள் சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

அரசாங்க அதிபர் உடனடியாக காலிமுகாம் அதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது அடுத்த செவ்வாய்க்கிழமை 15 இளைஞர்களை அனுப்புவதாகவும், அதன்பின்னர் படிப்படியாக இளைஞர்கள் அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க அதிபர் திரு.எம். பஞ்சலிங்கமும் யாழ். செயலக அரசாங்க அதிபரும் மாவட்ட இணைப்பு அதிகாரியுமான திரு. எஸ் பி. பாலசிங்கமும் இத்தகவலை வெளியில் வந்து தெரிவித்தபோது பெண்கள் அவர்களை சுற்றி வளைத்துக் கொண்டு 'ஐயோ என்ரை பிள்ளையை பெற்றுத் தாருங்கள்' என்று கதறி அழுதார்கள்.

''கடைசியாக 38 பேர் மட்டும் வந்தார்கள் அதன்பின் இரண்டுகிழமையாக ஒருவரும் வரவில்லை'' என்று தந்தை ஒருவர் தெரிவித்தார்.

''எங்கள பொறுப்பில் பிள்ளைகளை ஒப்படையுங்கள் தேவைப்பட்டால் கொண்டு வந்து தருகிறோம்'' என்று மற்றொரு தந்தை தெரிவித்தார்

அரசாங்க அதிபர் அளித்த உறுதிமொழியைத்தொடர்ந்து தாய்மார் காலை 10-30 மணிக்கு அமைதியாக அங்கிருந்து சென்றுர்கள். (க)

## அதிபர், ஆசிரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டுவரப் பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.வவனியா அரசாங்க அதிபர் திரு. வி, லோகேஸ்வரனுக்கு ஆசிரியர்கள் செய்த முறையீட்டைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் இது விடயமாக குறிப்பிட்ட முகாம் அதிகாரியுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர்களில் இம்மாதம் 10-ம் திகதி நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியரும் ஒருவர் என்று தெரிய வந்துள்ளது.

## ஆந்திர சட்ட...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

எஞ்சிய இடங்களை இந்திரா காங்கிரஸ் கட்சி உட்பட வேறுசில எதிர்கட்சிகளும் சுயேச்சை உறுப்பினர்களும் வைத்துள்ளனர்.

ஆந்திர சட்டசபை தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்பட்ட மகேந்திரநாத் தலைமையிலேயே நேற்றுக் கூடியது. பாஸ்கரராவ் ஆதரவாளர்கள் மகேந்திரநாத் சபாநாயகராக நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 30 நிமிட நேரம்வரை குழப்பத்திலீடுபட்டனர் (கி)

## கச்சதீவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளனர் என்றும் திரு எம்.ஜி ஆர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் வெளிநாட்டுச் சக்திகளின் ஊடுருவல், மற்றும் உளவாளிகள்ன் நடமாட்டம் குறித்து தமிழகப் பொலிஸாரைத் தாம் எச்சரிக்கை செய்திருப்பதாகவும் அவர் கூறினர். (கி)

## விமானத்தில்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னப்படைத்தளத்தில் தரையிறக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. வெடிகுண்டு எதுவும் இருக்கவில்லை என்று தெரிகிறது.

நேற்றுமாலை 2-30க்கு வந்த இவ்விமானம் நள்ளிரவே ஆஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றது.

## அரியாலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க வடபிராந்தியத் தலைவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புங்கங்குளம் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் உள்ள தந்திக் கம்பத்தில் இவருடைய சடலமும்: அரியாலை தபால் கட்டை சந்தியில் உள்ள தந்திக்கம்பத்தில் சுமார் 39 வயதுள்ளவருடைய சடலமும் கட்டி வைக்கப்பட்டிருந்தன, 'மா

## யாழ்.கச்சேரியில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

உடைக்க முயற்சி எடுக்கப்பட்டு தோல்வியில் முடிந்திருந்தது.

நேற்றுக் காலை சிறுப்பரும், காரியாலய உதவியாளர் உத்தியோகத்தரும் 'போல்ட்' டை திறந்தபோது திடீரென வந்த இரு இளைஞர்கள் உள்ளே சென்று இரும்புப் பெட்டியைத் துப்பாக்கி முனையில் திறக்கச் செய்தது டன்முத்திரைகளையும், பணத்தையும் எடுத்துச் சென்றதாககூறப்படுகிறது (க)

## பருத்தித்துறை சம்பவம்: நஷ்டஈடு வழங்கவேண்டும்

### பிரஜைகள் குழு அரசிடம் கோரிக்கை

(புலோலி)

பருத்தித்துறையில் ஆயுதப்படைகளினுல் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என பருத்தித்துறை பிரஜைகள் குழு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது அத்துடன் இச்சம்பவங்களின் போது உயிர் இழந்த குடும்பங்களுக்கு நஷ்ட ஈடும், சீவியத்திற்கான படியும் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளது.

பருத்தித்துறை பிரஜைகள் குழு மேலும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாவது;

''பருத்தித்துறையில் எரிந்து இடிந்த கட்டிடச் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

''இன்றைய நிலையில் கடல் தொழில் செய்யும் மக்கள் மிகப் பாதிப் டைந்துள்ளனர். இவர்களுக்கு வேண்டிய உதவிகளும், பாதுகாப்பும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

''மாணவர்களின் பீதி நீங்க பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஷ்த பெண்கள் உயர்தரக் கல்லூரிகளுக்கு அருகாமையில் உள்ள பொலிஸ்நிலையம் இடம் மாற்றப்படவேண்டும்.

## வாகனங்கள் சோதனை; இளைஞர்கள் விசாரணை

[யாழப்பாணம்]

ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதியில், நேற்றுக்காலை வாகனங்கள் சோதனையிடப்பட்டன.

வ. பி. போ. ச. பஸ்கள் உட்பட சகல வாகனங்களும் சோதனையிடப்பட்டன.

ஆனைக்கோட்டை உயரப் புலத்தில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்து, விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். அதே நேரத்தில் வேறு ஒரு இளைஞரும் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

## ''ராணுவத்தினர் துவக்கிஞல் கண்ணடிகளை உடைத்தனர்''

(யாழ்ப்பாணம்)

''இராணுவத்தினர் யாழ். ஐக்கிய வியாபார சங்க 'பாட்டா' பகுதி கண்ணடிகளை துவக்கினால் உடைப்பதைக் கண்டேன். அதன் பின் பெற்றோல் ஊற்றியதாக தெரிந்தது. பெற்றோல் வாடை வீசியது. அதே நேரத்தில் நெருப்பு மூண்டது.'

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் எரிந்த கட்டட இடிபாடுகளுக்குள் கண்டெடுத்த எலும்புதுண்டுகள் தொடர்பான விசாரணையில் நேற்று சாட்சியமளித்த யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர் முத்து நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இவ்விசாரணை நடைபெற்றது.

யாழ். ஐக்கிய வியாபார சங்க நலன்கருதி சட்டத்தரணி கே. வி. நவரத்தினம் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் ஆகியோர் ஆஜரானுர்கள். காணுமல் போன ந. நவரத்தினராசா மனைவி சார்பில் சட்டத்தரணி அரவிந்தன் ஆஜரானுர்.

முத்து நவரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''சம்பவதினம் மணிக்கூட்டு வீதிப்பக்கமாக இராணுவத்தினர் வந்து கொண்டிருந்தனர். ஆஸ்பத்திரி வீதி பாட்டாப் பகுதிப்பக்கம் 5, 6 இராணுவத்தினர் நின்றனர். வெடிச் சத்தங்கள் கேட்டது.

''இராணுவத்தினர் வெடி வைத்த வண்ணமே இருந்தார்கள். 2 பக்கமும் நெருப்புச் சுவாலையாக எரிந்தது. நான் மேல் மாடியிலிருந்து இறங்கினேன். சகஊழியரும் இறங்கினுர்கள்.

கீழே இராணுவம் நின்றது. நெருப்பு எரிந்ததால் அவர்கள் எங்களைக் காணவில்லை. ஆசிரியர் ஆறுமுகம் வீட்டிற்குப் போனேம்.

அரைமணி நேரம் அங்கு நின்றேன். சங்க கட்டடம் சுவாலையாக எரிந்தது. 4-10 மணிக்கு வெளியாட்கள் வந்தனர். இராணுவத்தினர் அப்போ சென்றுவிட்டனர் சுவரால்ஏறி மணிககூட்டு வீதிக்கு வந்தோம்

இராணுவ கமாண்டரும் உதவியாளரும் வைத்தியர் ஜெகா பசுபதியும். வைத்திய அத்தியட்சகர் நட்சினுர்க்கினியாருப் வந்தார்கள்.

வைத்திய அத்தியட்சகரின் உதவியுடன் இர்ாணுவகமாண்டர் கூறியபடி ஆஸ்பத்திரியைப் தண்ணீர் மூலம் எரிந்த கட்டடத்தை நூர்க்கமுயற்சித்தோம். இராணுவ கமாண்டர் நூர்க்கச் செல்லிவிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தார், அதனை நூர்க்க முடியவில்லை.

விசாரணை இம்மாதம் 24ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. [க]

## வவனியா நிலைமை

(வவனியா)

வவனியாப் பகுதியில் தீவிரவாதிகள் எவரும் குண்டுகளை வைத்தால் அதுபற்றி உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு இராணுவத்தினர் பொது மக்களை ஒலிபெருக்கி மூலம் கேட்டுள்ளனர்

வவனியா நகரில் நேற்று இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் இந்த கோரிக்கையை விடுத்தனர்.

கடைகளை திறக்குமாறும் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்புமாறும் அவர்கள் ஒலிபெருக்கி மூலம் தெரிவித்தனர்.

நேற்று வவனியா அமைதியாக இருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஜனதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

அண்மைக்கால சம்பவங்கள் குறித்தும், தாம் தங்கியிருந்த ஹோட்டலில் பொலிசார் நடத்திய சோதனை குறித்தும் கூட்டணித்தலைவர்கள் திரு மு. சிவசிதம்பரம், திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் ஜனதிபதிக்கு இரண்டு கடிதங்களை அனுப்பியுளளனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24/26.